09th
JUNE
2026

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 111 | பக்கங்கள் - 16 | editor.uthayam@gmail.com

# குர்ஆன் மொழிபெயர்ப்பு பிரதிகள் தடை விவகாரத்தில் திணைக்கள வழிகாட்டுதல்படியே செயற்பட்டுள்ளோம்

## அதனை மீறிச் செயற்படுவதற்கு எமக்கு அதிகாரம் கிடையாது

**புத்தக மீளாய்வுக் குழு உறுப்பினரும் ஜம்இய்யதுல் உலமாவின் உதவிப் பொருளாலருமான கலாநிதி அஸ்வர் அஸாஹிம் ஊடகங்களுக்கு வழங்கிய தகவல்**

புனித அல்குர்ஆன் மொழி பெயர்ப்பு பிரதிகள் தடை விவகாரத்தில் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டுதல்களின் அடிப்படையிலேயே புத்தக மதிப்பாய்வுக் குழு செயற்பட்டுள்ளது. அதனை மாற்றுவதற்கு அல்லது மீறிச் செயற்படுவதற்கு இக் குழுவுக்கு எந்த அதிகாரமும் கிடையாதென புத்தக மதிப்பாய்வுக் குழு உறுப்பினரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் உதவிப் பொருளாளருமான கலாநிதி அஸ்வர் அஸாஹிம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது தெரிவித்தார்.

ஊடகவியலாளரின் கேள்விகளுக்கு தொடர்ந்து பதிலளித்த அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அல்-குர்ஆன் தொடர்பான விவகாரம் குறித்து விளக்கம்

புத்தக மதிப்பாய்வுக் குழு (Book Review committee) குழுவினர் இதுவரை ஊடகங்களுக்கு எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை எனக் கேட்கப்படுகிறது.

இதற்கான விளக்கத்தை வழங்க விரும்புகிறேன்.

02ம் பக்கம்பார்க்க...

# அவசர கால சட்டம் மேலும் ஒரு மாத காலம் நீடிப்பு!

அவசரகால சட்டத்தை நீடிக்கும் தீர்மானம் 128 மேலதிக வாக்குகளால் இன்று (9) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 135 வாக்குகளும், எதிராக 7 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளது.

அவசரகால சட்டம் 128 மேலதிக வாக்குகளினால் நீடிக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான

03ம் பக்கம்பார்க்க...

# ஆகஸ்ட் 10 ஆம் திகதி உயர்தர பரீட்சை ஆரம்பம் புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட் 9 ல்

2026ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர (G.C.E. A/L) பரீட்சை ஒகஸ்ட் 10ஆம் திகதி முதல் செப்டம்பர் 05ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

03ம் பக்கம்பார்க்க...

# சரண குணவர்தனவுக்கு 16 ஆண்டு சிறை தண்டனை

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தன பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நீதிமன்றத்திலிருந்து

03ம் பக்கம்பார்க்க...

# சுரேஷ் சாலேக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பில் போராட்டம்

## அரசியல் பிரமுகர்கள் பங்கேற்பு

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுச்சேவையின் முன்னாள் தலைவர் சுரேஷ் சாலேவுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த கூடாரம் பொலிஸாரால்

03ம் பக்கம்பார்க்க...

# சர்வாதிகார ஆட்சியின் செயற்பாடுகளுக்கு எதிராக ஐ.ம.சக்தியால் புதிய சிவில் சமூக இயக்கம்



## சஜித் பிரேமதாச அறிவிப்பு

ஜனநாயகத்தையும், அடிப்படை உரிமைகளையும் மீறி, நாட்டில் நிலைகொள்ளும் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் புதிய சிவில் சமூக

03ம் பக்கம்பார்க்க...

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி விரைவில் அம்பலம்

## பிரதியமைச்சர் மகிந்த ஜயசிங்க




உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி மிக விரைவில் வெளிப்படுத்தப்படுவார் என்று தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளியிடும்போது அவர்

03ம் பக்கம்பார்க்க...

# பிலிப்பைன்ஸை உலுக்கிய பாரிய நில நடுக்கம்

## 37 பேர் பலி; 500 க்கு மேற்பட்டோர் காயம்



பிலிப்பைன்ஸின் மிண்டானோ தீவுக்கு அருகே 33 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்ட 7.8 ரிச்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37 ஆக

03ம் பக்கம்பார்க்க...

# பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கம் விரைவில் புதிய சட்டம்

## பாராளுமன்றில் நீதியமைச்சர் அறிவிப்பு

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள சர்ச்சைக்கிரிய "பயங்கரவாத தடைச் சட்டம்" முழுமையாக நீக்கப்பட்டு, புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான இறுதிக்கட்ட பணிகள் நடந்து வருவதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார நாடாளுமன்றத்தில் இன்று அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்த முக்கிய விபரங்களை வெளியிட்டார்.

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக ஒழிப்பதற்கான பணிகள் அதன் இறுதிப் படியில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

அடுத்த ஒன்றரை அல்லது இரண்டு மாதங்களுக்குள் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று, புதிய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்த

03ம் பக்கம்பார்க்க...

# கடலில் மூழ்கி உயிர் நீத்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர்

## புத்தளத்தில் சோகம்

(எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேசத்தின் நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்கு உற்பட்ட தளுவை முகத்துவார கடற்பரப்பில் நீரில் மூழ்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டும் இளம் யுவதிகளும், இளைஞர் ஒருவரும் உயிரிழந்ததாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துயரச் சம்பவம் சனிக்கிழமை (06) மாலை இடம்பெற்றது.

புத்தளம் தில்லையடி உமரபாத்

03ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## குர்ஆன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலில், அல்-குர்ஆன் யாராலும் தடை செய்யப்பட வில்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இலங்கைக்கு கொண்டு வரப்படவிருந்த நூலின் மாதிரி (Sample) பிரதியொன்று, அது இறக்குமதி செய்யப்படுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே எங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அப்போது திணைக்களத்தின் அந்நேரப் பணிப்பாளர் அந்த மாதிரியை எங்களிடம் வழங்கியபோது, அது நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களுடன் (Guidelines) பொருந்தவில்லை என்று தெரிவித்தோம்.

மேலும், அது அல்-குர்ஆன் அல்ல குர்ஆனின் மொழிபெயர்ப்பு நூலாகும். இலங்கைக்கு அல்-குர்ஆனை கொண்டு வருவதில் எந்தவித தடையும் இல்லை.

இஸ்லாமிய வெறுப்பு (Islamophobia) பரவிய காலகட்டத்திலும், பின்னர் ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிறகும், குர்ஆனில் உள்ள ஜிஹாத் தொடர்பான வசனங்கள் குறித்து முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் தவறான புரிதல்களை உருவாக்கிக் கொண்டனர். இதன் காரணமாக, அவ்வசனங்களுக்கு விளக்கக் குறிப்புகள் (Footnotes) வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து ஏற்கனவே இருந்தது.

உண்மையில், இது புத்தக மதிப்பாய்வு குழு உருவாக்கப்படுவதற்கு முன்னரே நடைமுறையில் இருந்த ஒரு நிலைப்பாடாகும். அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வெளியிட்ட குர்ஆன் மொழிபெயர்ப்பிலும் மர்ஹூம் முபாரக் ஹஸரத் அவர்கள் தனது முன்னுரையில், இந்த நாட்டின் மக்கள் குர்ஆனை தவறாகப் புரிந்துகொள்ளாமல் இருக்க தேவையான விளக்கங்கள் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த அடிப்படையிலேயே, மாற்று மதத்தைச் சேர்ந்த சகோதரர்கள் ஜிஹாத் தொடர்பான வசனங்களை தவறாகப் புரிந்துகொள்ளாமல் இருப்பதற்காக சில வழிகாட்டுதல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில், சமர்ப்பிக்கப்பட்ட நூல் பொருந்தவில்லை என்பதால், அதை அப்படியே வெளியிட முடியாது என்று தெரிவித்தோம். மாதிரி பிரதியை பெற்ற ஒரு மாதத்திற்குப் பிறகு, அது பரிந்துரைக்கப்படவில்லை என்று அதிகாரபூர்வமாக அறிவித்தோம். காரணம், எங்களுக்குக் கொடுக்கப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் வேறு முடிவெடுக்க முடியாத நிலை இருந்தது. இல்லையெனில், முதலில் அந்த வழிகாட்டுதல்களை மாற்ற வேண்டும் என்று தெரிவித்தோம்.

இவ்வாறு எங்களது நிலைப்பாட்டைத் தெரிவித்த பின்னரும், ஒரு மாதத்திற்குப் பிறகு அந்த நூல் அச்சிடப்பட்டு வந்தது. பின்னர் ஏற்பட்ட சிக்கல்களுக்கு புக் ரிவியூ குழு பொறுப்பல்ல.

அத்துடன், அல்-குர்ஆன் என்பதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அந்நேர கலாசார அமைச்சர் சுனில் செனவிரத்ன அவர்களிடம், தேவையான விளக்கக் குறிப்புகளுடன் (Footnotes) அந்த நூலை வெளியிட அனுமதிக்குமாறு பரிந்துரைத்தோம். ஆனால் அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இன்றும் நாங்கள் கூறுவது ஒன்றே: குர்ஆன் மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிடப்பட வேண்டும். அவை தேவையான விளக்கக் குறிப்புகளுடன் அல்லது ஏதேனும் பொருத்தமான குறிப்புகளுடன் வெளியிடப்படலாம். ஆனால் இந்த விடயத்தில் வெளியில் கருத்து தெரிவிப்பவர்களில் எவரும் பொறுப்பேற்று முன்வரவில்லை.

குர்ஆனில் உள்ள ஜிஹாத் தொடர்பான வசனங்களை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றங்களில் கூட வழக்குகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான ஆதாரங்களின் அடிப்படையிலேயே நான் பேசுகிறேன்.

நாங்கள் குர்ஆனுக்கும் மார்க்கத்திற்கும் சேவை செய்யும் நோக்கத்திலேயே தன்னார்வ அடிப்படையில் (Voluntary Basis) பணியாற்றுகிறோம். எங்களுக்கு எந்தவித சம்பளமோ அல்லது தனிப்பட்ட நலனோ கிடையாது.

2019 முதல் 2022 வரை புத்தக மதிப்பாய்வு குழு செயற்படவில்லை. அதற்கு முன்னரும் மத நூல்களின் பரிசீலனை திணைக்களம் அல்லது ஜம்இய்யத்துல் உலமா வழியாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. அப்போதும் தேவையான இடங்களில் விளக்கக் குறிப்புகள் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து நிலவியது.

2019 முதல் 2022 வரை மத்ரஸா மாணவர்களுக்கான பாடநூல்கள் உட்பட பல நூல்கள் நாட்டிற்கு வர முடியாத சூழ்நிலை நிலவியது. அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து, சமூகத்திற்கு சேவை செய்வதற்காகவே இந்த புத்தக மதிப்பாய்வு குழு உருவாக்கப்பட்டது.

இந்தக் குழுவில் சூபி மற்றும் தப்லீக் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பதாக சிலர் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். ஆனால் 2019 முதல் 2022 வரையிலான கடினமான காலகட்டத்தில் இந்தப் பொறுப்பை ஏற்க யாரும் முன்வரவில்லை. அப்போது ஒரு மத நூலை வெளியிடுவதற்கே பலர் அச்சத்துடன் இருந்தனர்.

எங்களும் சாதாரணமாக நியமிக்கப்படவில்லை. காவல்துறை சான்றிதழ்கள் உள்ளிட்ட தேவையான பரிசோதனைகளின் பின்னரே நியமிக்கப்பட்டோம்.

நாங்கள் சமூக நலனுக்காகவே பணியாற்றி வருகிறோம். அல்லாஹ்வின் குர்ஆனை யாராவது வேண்டுமென்றே தடை செய்வார்களா?

எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் மட்டுமே நூல்களைப் பரிசீலிக்க முடியும். அன்சார் இப்ராஹீம் அவர்கள் பணிப்பாளராக இருந்த காலத்தில்தான் இந்த வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டன.

அந்த வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில்தான் சில நூல்கள் பரிந்துரைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் தவறு செய்திருந்தால் விமர்சிக்கலாம். ஆனால் சிலர் சமூக ஊடகங்கள் மற்றும் யூடியூப் வழியாக கருத்து தெரிவிப்பதால் மட்டும் உண்மை மாறிவிடாது. சிந்தித்துப் பாருங்கள் எல்லோருடைய பிரச்சினைகளையும் எங்கள் மீது சுமந்துகொண்டு எங்களுக்கு என்ன இலாபம்?

நாங்கள் ஹன்பலி, மாலிகி அல்லது வேறு எந்த மத்ஹபையும் அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதில்லை.

எங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில்தான் செயற்படுகிறோம்.

எங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஒரு நூலைத் தடுக்கவும் முடியாது அனுமதிக்கவும் முடியாது. நாங்கள் பரிந்துரைகளை மட்டுமே வழங்குகிறோம். இறுதி முடிவெடுப்பது அதிகாரசபையின் பொறுப்பு.

எங்களை விமர்சிப்பவர்கள் எங்களுடன் நேரடியாக கலந்துரையாடியுள்ளனரா? எங்களுடன் வந்து அமர்ந்து பேச யாரும் தயாராக உள்ளனரா? எப்போதும் நாங்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டே இருக்கிறோம்.

நாங்கள் குர்ஆனுக்கும் சமூகத்திற்கும் சேவை செய்து கொண்டிருக்கிறோம்.

எங்களை விமர்சிப்பவர்கள் நேரடியாக வந்து இந்தப் பணிகளில் பங்கேற்றுள்ளனரா என்பதையும் சிந்திக்க வேண்டும்.

மீண்டும் வலியுறுத்துகிறேன்: எங்களுக்கு தனிப்பட்ட அதிகாரம் கிடையாது. திணைக்களம் வழங்கியுள்ள வழிகாட்டுதல்களுக்கு வெளியே சென்று செயற்பட முடியாது. அந்த வழிகாட்டுதல்களை மாற்ற வேண்டுமெனில், அதற்கான நடவடிக்கைகள் அதிகாரபூர்வமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.



### அவசர...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதம் இடம்பெற்றது.

விவாதத்தின் முடிவில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான யாழ் மாவட்ட எம்.பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வாக்கெடுப்புக்கோரினார்.

இதனையடுத்து இடம்பெற்ற வாக்கெடுப்பில் அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பதற்கு ஆதரவாக 135வாக்குகளும் எதிராக 7 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியோடு இணைந்து தமிழரசுக்கட்சியும் எதிராக வாக்களித்தது. அதனடிப்படையில் அவசரகால சட்ட நீடிப்பு 128 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் 82 எம்.பி.க்கள் பங்கேற்கவில்லை.

### ஆகஸ்ட்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, 2026 ஆம் ஆண்டுக்கான 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை ஒகஸ்ட் 09ஆம் திகதி நடைபெறவுள்ளது.

### சுரேஷ்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றப்பட்டுள்ளது.

இன்று (08) காலை முதல் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்திற்கு முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், போராட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரத்தை பொலிஸார் அகற்றியுள்ளதுடன், பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுச்சேவையின் முன்னாள் தலைவர் சுரேஷ் சாலேவுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டங்கள் முன்னெடுக்கபட்டுள்ளன.

நேற்று (08) காலை கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட பல அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பலர் ஆதரவாக கலந்துகொண்டுள்ளனர்.

சுரேஷ் சாலேவின் விடுதலையை வலியுறுத்தியும், அவரது கைது மற்றும் தடுப்புக் காவலை கண்டித்தும் போராட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பியுள்ளனர்.

இதன் காரணமாக குறித்த பகுதியில் பொலிஸார் , விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது போராட்டத்தில் கலந்துக்கொண்ட சுரேஷ் சாலேவின் தாயார் உருக்கமான கோரிக்கையொன்றினையும் முன்வைத்துள்ளார்.

“எனது மகனை உயிருடன் என்னிடம் ஒப்படையுங்கள். நாட்டுக்காகவே அவரை நான் ஒப்படைத்தேன். ஆனால் அரசியல் நோக்கங்களுக்காக அவரை பலிகொடுக்க என்னால் முடியாது” இனி எந்த தாய்மாரும் தங்களது பிள்ளைகளை இராணுவ சேவைக்காக அர்ப்பணிக்கக் கூடாது அவ்வாறு செய்தால் தன்னைப் போலவே போராட வேண்டிய நிலை ஏற்படும் என கண்ணீருடன் தெரிவித்துள்ளார்.

### சரண...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்த நான்கு வழக்குகளிலும் வழக்கு ஒன்றுக்கு நான்கு ஆண்டுகள் வீதம் மொத்தம் 16 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதிவாதிக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் சுமத்தப்பட்டிருந்த ஊழல் குற்றச்சாட்டுகளை, நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் முறைப்பாட்டாளர்கள் நிரூபித்துள்ள நிலையில் மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பை அறிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், பொருளாதாரம் வங்குரோத்தடைவதற்கும் இத்தகைய செயல்கள் வழிவகுத்துள்ளன என தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் 303 ஆவது பிரிவின் கீழ் மென்போக்கைக் கையாளுமாறு பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இருப்பினும், இக்குற்றத்தின் தன்மையைக் கருத்திற் கொள்ளும் போது, அரசு நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல்களைத் ஊக்கமிழக்கச் செய்வதற்கு ஏதுவான வகையிலான தண்டனையொன்றை வழங்க நீதிமன்றம் விதிக்க வேண்டும் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்த நான்கு வழக்குகளிலும் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தனவுக்கு, வழக்கு ஒன்றுக்கு நான்கு ஆண்டுகள் வீதம் மொத்தம் 16 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சரண குணவர்தனவுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள 4 வழக்குகளில் ஒவ்வொரு வழக்குக்கும் தலா 4 ஆண்டுகள் வீதம் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய வழக்குகளுக்காக சரண குணவர்தனவுக்கு 18 இலட்சம் ரூபா அபராதமும் நீதிமன்றம் விதித்துள்ளது.

# கனடா ஒன்டாரியோவில் தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கான அறிவூட்டல் கருத்தரங்கு




கனடாவின் புறநகரான ஒன்டாரியோவின் மஸ்ஜித் அல் ஜன்னா இங்கு வாழும் தமிழ் பேசும் முஸ்லிம்களை அறிவூட்டுவதற்காக ஒரு வார கருத்தரங்கினை நடத்தியது.

இலங்கையிலிருந்து அழைக்கப் பட்டிருந்த ஜாமியா தததத நளிமியா பணிப்பாளர் அகார் முகம்மத், அஷ்ஷேக் முபாரக் (மதனி) அஷ்ஷேக் ஹலீம் விரிவுரையாளர் கொழும்பு சாகிரக்கல்லூரி ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புக்களில் விரிவுரைகள நடத்தினர்.

### கடலில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியைச் சேர்ந்த ரம்சான் பாத்திமா ரிஸ்கானா(வயது 17), ரம்சான் பாத்திமா சஹ்றா (வயது 19) மற்றும் அவர்களுடைய ஒன்றுவிட்ட சகோதரரான இஸ்மத் முஹம்மது உசாம் (வயது 25) ஆகிய மூவருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

நான்கு பெண் பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் இரண்டாவது மற்றும் மூன்றாவது பிள்ளைகளான இரண்டு சகோதரிகளும், உயிரிழந்தவர்களின் தாயின் இளைய சகோதரியின் மகனான 25 வயதுடைய இளைஞனும் உயிரிழந்தவர்களின் தாயின் இளைய சகோதரியின் மகனும் இந்த துயர சம்பவத்திற்கு முகம் கொடுத்தனர்.

விடுமுறையை சந்தேஷமாக கழிப்பதற்காக சனிக்கிழமை (06) மாலை 3 மணியளவில் சிறுவர்கள், பெண்கள் மற்றும் இரண்டு ஆண்கள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் நுரைச்சோலை தளுவையின் முகத்துவார கடற்கரை பகுதிக்கு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது

சம்பவம் இடம்பெற்ற போது, தளுவை முகத்துவார கடற்பரப்பில் மாலைப் பொழுதில் இரண்டு சகோதரிகளும் அருகருகே நீராடி குதூகலித்துக் கொண்டிருந்த போது, எதிர்பாராத வகையில் பலத்த காற்று மற்றும் கடும் நீரோட்டம் காரணமாக யாரும் எதிர்பாராத வண்ணம் அந்த இரண்டு சகோதரிகளையும் நீர் இழுத்துச் சென்றுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து இரண்டு சகோதரிகளையும் கடல் நீர் இழுத்துச் செல்வதை அவதானித்த சகோதரர் அவ்விருவரையும் காப்பாற்றுவதற்காக நீருக்குள் பாய்ந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இரண்டு சகோதரிகளும் நீருக்குள் மூழ்கிய நிலையில், அவர்களை காப்பாற்றுவதற்காக நீருக்குள் பாய்ந்த அந்த இளைஞரும் நீருக்குள் மூழ்கி உயிருக்காக போராடிக்கொண்டிருந்தார்கள் எனவும் அதனையடுத்து அவரை காப்பாற்றுவதற்காக அந்த இளைஞனின் தந்தை முழுமையாக முயற்சி எடுத்த போதிலும் அந்த முயற்சியும் பலனளிக்காது குடும்பத்தினர் கண் முன்னே இரண்டு சகோதரிகளும், அந்த இளைஞரும் நீருக்குள் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

இதனையடுத்து, அங்கிருந்த சிலரின் உதவியுடன் கடல் நீருக்குள் மூழ்கிய இளம் யுவதிகள் இருவர் மற்றும் இளைஞர் ஆகிய மூவரும் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்த மூவரும் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அவர்களை பரிசோதித்த வைத்தியர் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞரான இஸ்மத் முஹம்மது உசாம் சிங்கப்பூரில் ஹோட்டலொன்றில் பணியாற்றி வந்ததாகவும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் குடும்பத்தினரை பார்ப்பதற்காக விடுமுறையில் நாட்டுக்கு வருகை தந்திருந்தார் எனவும் இம்மாதம் 26 ஆம் திகதி மீண்டும் தொழில் நிமித்தம் சிங்கப்பூருக்கு செல்ல இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

மேலும், இந்த சம்பவத்தில் உயிரிழந்த ரம்சான் பாத்திமா ரிஸ்கானா என்பவர் தில்லையடி அல்ஜித்தாவில் இயங்கி வரும் பெண்கள் அரபு மதரஸா ஒன்றில் கல்வி கற்று பட்டமளிப்பு விழாவுக்காக காத்திருந்தார் என்றும், அவரது சகோதரியான ரம்சான் பாத்திமா சஹ்றா எனும் மாணவி க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுக்காக காத்திருந்தார் எனவும் குடும்ப உறவினர்கள் தெரிவித்தனர்.

புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிசாம், சம்பவ இடத்தை பார்வையிட்டு பின்னர் ஜனாஸா மீதான மரண விசாரணையை நடத்தினார்.

சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

உயிரிழந்த மூவரின் ஜனாஸா ஞாயிற்றுக்கிழமை (07) உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் ஜனாஸா நல்லடக்கம் இரவு 8 மணியளவில் புத்தளம் தில்லையடி ஜும்ஆ பள்ளிவாசலின் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதில் பெருந்திரளான பொது மக்கள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு இளம் சகோதரிகள் மற்றும் இளைஞன் ஆகியோரது மரணம் முழுப் புத்தளம் மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி இருந்ததையும அவதானிக்க முடிந்தது.

### பிலிபைன்ஸ்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ந்துள்ளது. மேலும், 500-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தையடுத்து சுமார் 20,000-க்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பு கருதி இடம்பெயர்ந்து அவசரகால முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கடலில் 1.4 மீட்டர் உயரம் வரை சுனாமி அலைகள் பதிவானதால் கடலோர பகுதிகளில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சுமார் 2,000 வீடுகள், 117 அரசு கட்டிடங்கள் மற்றும் பல அடுக்குமாடி குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன. மேலும், ஜெனரல் சாண்டோஸ் விமான நிலையம் மூடப்பட்டு, மனிதாபிமான உதவி விமானங்கள் மட்டுமே இயக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உயிர்த்த...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக ஏராளமான உண்மைகள் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தாக்குதல் தொடர்பான உண்மையான தகவல்களை வெளிப்படுத்தும் இறுதிக்கட்டத்தை தற்போது எட்டியுள்ளது. இதன் காரணமாக சுரேஷ் சலேயைச் சுற்றியுள்ள பலர் இன்று கவலையுடன் காணப்படுகின்றனர்.

சுரேஷ் சாலே தரப்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதற்கு திலீப பீரிஸ் நீதிமன்றத்தில் ஆதாரங்களைச் சமர்ப்பித்து வருகின்றார் என்றும் பிரதியமைச்சர் மகிந்த ஜயசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

### பயங்கரவாத...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய சட்டத்தின் மூலம் “பயங்கரவாதச் செயல்“ என்றால் என்ன என்பது துல்லியமாக வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் கிளிநொச்சி பாடகர் சங்கீத்சன் கைது செய்யப்பட்ட விவகாரம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர வெளியிட்ட கருத்துக்கள் முற்றிலும் தவறான தகவல் அடிப்படையிலானவை என குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பாடகர் மேடையில் பாடல் பாடியதற்காகவோ அல்லது தனது கலை உணர்வுகளை வெளிப்படுத்தியதற்காகவோ கைது செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சட்டம் அமலாக்கப்படுவதில் எந்தவொரு இனப் பாகுபாடும் இல்லை எனவும், பேச்சுச் சுதந்திரம் என்பது அனைவருக்கும் பொதுவானது எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வட பகுதிக்கும் சரி, தெற்கு பகுதிக்கும் சரி ஒரே சட்டம்தான் அமல்படுத்தப்படுகிறது. ஒருவர் தமிழர் அல்லது முஸ்லிம் என்பதற்காகச் சட்டம் மாறுபடப் போவதில்லை அதேபோல ஒருவர் சிங்களவர் என்பதற்காகச் சட்டம் கூடுதலாகப் பாயப் போவதுமில்லை என குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டம் இன்னும் நாட்டில் நடைமுறையிலுள்ளதால், அதன் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அதில் உள்ள குறைபாடுகள் மற்றும் தவறுகள் அனைத்தையும் நீக்கி, மிக விரைவில் புதிய சட்டம் நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்படும் என நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### சர்வதிகார...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கமொன்று ஸ்தாபிக்கப்படும் - எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இன்று மூன்று அதிகாரங்கள் மீது கட்டமைக்கப்பட்ட ஜனநாயக அரசில் நிறைவேற்று அதிகாரம் படைத்தவர் படிப்படியாக அதிகாரத்தை வலுப்படுத்திக்கொண்டு சட்டவாக்கத்தின் அதிகாரத்தையும், நீதித்துறையின் இறைமையில் தலையிட்டு நீதித்துறையின் சுதந்திரத்தை அழிப்பதற்கும், ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதற்கும், நிகழ்நிலை காப்புச் சட்டத்தை பயன்படுத்தி ஊடக சுதந்திரத்தை பாதிப்படையச் செய்து மக்களின் அடிப்படை உரிமையையும், பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் மத உரிமைகளையும் பாதிப்படையச் செய்துள்ளனர். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை தவறான முறையில் பயன்படுத்தி ஜனநாயகத்தைப் புதைத்து வரும் இந்த காலகட்டத்தில், நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கும் வகையிலான சிவில் சமூக இயக்கத்தின் தேவையொன்று வெகுவாக எழுந்து காணப்படுகின்றன. இது ஜனநாயக கட்டமைப்பின் அதிகாரங்களுக்கிடையிலான தடைகள் மற்றும் சமன்பாடுகளைச் சரியாகவும் தெளிவாகவும் நிறைவேற்றக்கூடிய சிவில் சமூக இயக்கமாக ஆக்குவது மிகவும் முக்கிய விடயமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இலங்கையில் உருவாகிய ஜனநாயகத்தை பாதுகாக்கும் நோக்கத்தை நிறைவேற்றும் பரந்த சிவில் சமூக இயக்கத்தை உருவாக்கும் நோக்கத்துடன், இன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் பல சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

2015, 2019 மற்றும் 2024 தேர்தல்களில் மக்களின் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கையில் சாதகமான தாக்கங்களை ஏற்படுத்திய பிரதான தரப்பாக சிவில் அமைப்புகளை அழைக்கலாம். பல சிவில் சமூக அமைப்புகளின் ஆயுட்காலம் பல சந்தர்ப்பங்களில் மிகவும் வரையறுக்கப்பட்ட ஒன்றாக அமைந்து காணப்படுகின்றன. தேர்தல் வெற்றி கிடைத்த பின் இந்த சிவில் அமைப்புகளை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாத நிலை காணப்பட்டன. காணப்பட்டு வருகின்றன. நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கும், மைத்திரிபால சிரிசேன அவர்களை வெற்றிபெற செய்வதற்கும் சிவில் சமூக அமைப்புகள் மகத்தான பல பங்களிப்புகளை வழங்கின. ஆனால் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து சமூக நீதியை உருவாக்க முன்வந்த அந்த இயக்கம் பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளானது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 JUNE 09 - TUESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# 2026 ஹஜ்: மினாவில் இலங்கை ஹஜ் யாத்திரீகர்கள் எதிர்நோக்கிய அவலங்கள்!!

### – பொறுப்பேற்க வேண்டியது யார்? –

2026 ஆம் ஆண்டுக்கான ஹஜ் யாத்திரையின் போது, மீனாவில் தங்கியிருந்த போது இலங்கை ஹஜ் யாத்திரீகர்கள் எதிர்நோக்கிய அசௌகரியங்களும் மனிதாபிமானக் குறைபாடுகளும் வெறும் நிர்வாகத் தவறுகளாகக் கருதப்பட்டு இலகுவில் மறக்கப்படக்கூடியவை அல்ல.

இது திட்டமிடல் தோல்வி, ஒருங்கிணைப்பு குறைபாடு மற்றும் தலைமைத்துவ வெற்றிடம் என்பனவற்றை அம்பலப்படுத்தின.

ஹஜ் என்பது சாதாரண சுற்றுலா அல்ல. பலருக்கு அது தமது வாழ்நாள் முழுவதும் சேமித்த பணத்தின் மூலமாக நிறைவேறும் ஆன்மிகப் பயணம். உடல், மனம், பொருளாதாரம் என பல தியாகங்களின் பின்னர் அல்லாஹ்வின் இல்லத்திற்குச் செல்லும் யாத்திரீகர்கள், அங்கு அடிப்படை மனித வசதிகளுக்காகவே போராட வேண்டிய நிலை உருவாகியிருந்தால், அது மிகப் பெரிய தோல்வி அல்லவா?

முதலில், மீனாவில் கூடார வசதிகளின் பற்றாக்குறை மிகக் கடுமையாகப் பதிவாகியுள்ளது. ஆயிரக்கணக்கான யாத்திரீகர்களுக்குப் போதுமான இடவசதி இல்லாமல், நெரிசலான சூழலில் தங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இது வெறும் அசௌகரியம் அல்ல் முதியவர்கள், பெண்கள், உடல்நலக் குறைபாடுடையோர் ஆகியோரின் பாதுகாப்பையே கேள்விக்குள்ளாக்கும் விஷயமாகும்.

இரண்டாவது, கழிப்பறை வசதிகளின் நிலைமை ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்ததாகப் பலர் தெரிவிக்கின்றனர். ஒரு கழிப்பறையை சுமார் 100 பேர் பயன்படுத்த வேண்டிய சூழல் இருந்ததாகக் கூறப்படுவது, முன் திட்டமிடல் எவ்வளவு மோசமான நிலையில் இருந்தது என்பதைத் தெளிவாக காட்டுகிறது. ஒரு மனிதனின் அடிப்படை கண்ணியத்திற்கே சவாலாக அமைந்த இந்த அவல நிலையை உடனடியாக நிவர்த்தி செய்ய சம்பத்தப்பட்ட தரப்பினர் என்ன செய்தார்கள் என கேட்க வேண்டியுள்ளது.

மூன்றாவது, உணவு விநியோகத்தில் ஏற்பட்ட குளறுபடிகள் நிலைமையை இன்னும் மோசமாக்கின எனலாம். சுமார் 3500 பேருக்காக இரண்டு புஃபே மையங்கள் மட்டுமே இருந்ததாகக் கூறப்படுவது நம்ப முடியாத அளவுக்கு நிர்வாக அலட்சியத்தைக் காட்டுகிறது. யாத்திரீகர்கள் உணவுக்காக நீண்ட வரிசைகளில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தால், குறிப்பாக கடுமையான வெப்பநிலையில், அது சுகாதார மற்றும் உளரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளன.

இத்தகைய நிலைமைகள் எவ்வாறு உருவாயின? இதற்கு யார் பொறுப்பு? இலங்கை ஹஜ் குழுவின் ஒருங்கிணைப்பு திறன் எங்கே தோல்வியடைந்தது? சவுதி ஹஜ் அதிகாரிகளுடன் முன்கூட்டிய ஏற்பாடுகள் ஏன் போதுமான முறையில் செய்யப்படவில்லை? தேவையான கூடாரங்கள், கழிப்பறைகள், உணவு விநியோக மையங்கள் போன்ற அடிப்படை வசதிகள் பற்றிய ஒப்பந்தங்களும் கண்காணிப்பும் முறையாக மேற்கொள்ளப்பட்டதா?

மேலும், தலைமைத்துவ பற்றாக்குறையும் வழிகாட்டுதலின்மையும் இந்த நெருக்கடியை மேலும் மோசமாக்கியதாக யாத்திரீகர்கள் குற்றம்சாட்டுகின்றனர். சிக்கல்கள் எழுந்தபோது உடனடி தீர்வுகளை வழங்க வேண்டியவர்கள் எங்கே இருந்தனர்? மக்களின் துயரங்களை கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பாளர்கள் மௌனமாக இருந்தார்களா?

ஹஜ் ஏற்பாடுகளையும் இலங்கை யாத்திரிகர்களுக்கான வசதிகள் தொடர்பாகவும் பிரதி அமைச்சர் ஒருவரும் ஹஜ் குழு உறுப்பினர்களும் மக்கா சென்றிருந்த போதிலும் , தாம் எதிர் நோக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை என ஹஜ் யாத்திரீகர்கள் கவலை தெரிவித்தனர்.

உணவு மற்றும் கழிப்பறைக்கான நீண்ட வரிசைகளில் பல மணி நேரங்கள் வீணானது. இதனால் யாத்திரீகர்கள் தமது தொழுகைகள், துஆக்கள் மற்றும் ஹஜ்ஜின் முக்கிய ஆன்மிக கடமைகளில் முழுமையாக ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டது. ஏமாற்றம், மனஅழுத்தம், அதிருப்தி மற்றும் அமைதியின்மை அதிகரித்தது. ஹஜ் போன்ற ஆன்மிக உச்ச அனுபவம், நிர்வாக குழப்பத்தால் மனவேதனையாக மாறியிருக்கக் கூடாது.

இதனை சாதாரண குறையாகக் கருதி மறைத்து வைப்பது அல்லது “அடுத்த ஆண்டு பார்த்துக்கொள்வோம்” என தள்ளிப்போடுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. உடனடியாக ஒரு சுயாதீனமான, வெளிப்படையான களஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். என்ன தவறுகள் நடந்தன? யார் பொறுப்பேற்க வேண்டும்? எதிர்காலத்தில் இது மீண்டும் நிகழாமல் இருக்க என்ன கட்டமைப்பு மாற்றங்கள் தேவை? என்பதற்கான தெளிவான பதில்கள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அதேவேளை, இவ்விடயம் தொடர்பாக சவூதி ஹஜ் அமைச்சகத்திடம் அதிகாரப்பூர்வ முறையில் புகார் பதிவு செய்யப்பட வேண்டும். இலங்கை யாத்திரீகர்களின் நலன் மற்றும் மரியாதையை உறுதிப்படுத்தும் வகையில், அடுத்தடுத்த ஆண்டுகளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மிக முன்கூட்டியே உறுதி செய்யப்பட்டு, ஒவ்வொரு அம்சத்திற்கும் பொறுப்புக்கூறல் நடைமுறை கொண்டுவரப்பட வேண்டும்.

இதுபோன்ற அவலங்கள் எதிர்காலத்திலும் ஏற்படாதிருக்க உரிய தரப்பினர் ஆவண செய்ய வேண்டும்.






# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் புத்தளத்துக்கு விஜயம்




(எம்.யூ.எம்.சனூன்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் (05) புத்தளம் நகருக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டார். இந்த விஜயத்தின் போது கட்சியின் பிரதேச மற்றும் மத்தியக் குழு உறுப்பினர்களை அவர் சந்தித்து கலந்துரை யாடினார்.

புத்தளம் கரைத்தீவு, உளுக்காப் பள்ளம், புளுதிவயல், பாலாவி, நாகவில்லு மற்றும் கொத்தாந்தீவு ஆகிய பகுதிகளில் நடைபெற்ற கட்சி முக்கியஸ்த்தர்களுடனான கலந்துரையாடல்களிலும் அவர் பங்கேற்றார்.

புத்தளம் மாநகர சபை உறுப்பினரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் புத்தளம் தொகுதி அமைப்பாளருமான ரணீஸ் பதுருதீனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த சந்திப்புகளில் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் போது, பிரதேச மக்களின் பிரச்சினைகள், கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் அரசியல் நிலவரங்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

# வாழைச்சேனை அந் நஜ்வதுல் இஸ்லாமிய்யாஹ்வில் ஏழாவது பட்டமளிப்பு




(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

வாழைச்சேனை அந் நஹ்ஜதுல் இஸ்லாமிய்யாஹ் அரபு கல்லூரியின் ஏழாவது பட்டமளிப்பு விழா நேற்று சனிக்கிழமை (06.06.2026) மாலை வாழைச்சேனை அந் நூர் தேசிய பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது.

கல்லூரியின் தலைவர் அஷ்ஷெய்க் ஏ.ஜி.ஹாமிது ஸதகா மற்றும் கல்லூ ரியின் அதிபர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். ரஹ்மத்துல்லாஹ் ஆகியோரது கூட்டுத்தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் தலைவர் முஃப்தி எம்.ஐ.எம். றிஸ்வி கலந்து கொண்டார்.

அதிதிகளாக தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் கலாநிதி எம். சி.ஏ.நாஸர், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாறக், கோறளைப்பற்று மேற்கு கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.எம். தாஹிர், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.ஜவாஹிர் சாலி, காத்தான்குடி ஜாமி அதுல் பலாஹ் அரபுக்கல்லூரியின் செயலாளர் கவிமணி அஷ்ஷெய்க் எம்.எச்.எம். புஹாரி, பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச பள்ளிவாயல்களின் நிருவாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது அந் நஹ்ஜதுல் இஸ்லாமிய்யாஹ் அரபு கல்லூரியின் நிறுவாகிகளால் பிரதம அதிதிக்கு நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப் பட்டதுடன் பட்டம் பெற்ற மாணவர்களின் பெற்றோர்களால் கல்லூரி முதல்வர் நினைவுசின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் நிறுவாகத்தினரை பிதேசத்தின் இளம் தொழில் அதிபர் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார்.

2018ம் ஆண்டு தொடக்கம் 2025ம் ஆண்டுவரை எட்டு வருடங்கள் மௌலவி பட்டம் பெற்ற என்பத்தி மூன்று (83) அல் ஆலிம் நஹ்ஜி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட துடன் குர்ஆனை மனனம் செய்த அறுபத்தி மூன்று (63) பேர் அல் ஹாபில் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விழாவின் கதாநாயகர்களான பட்டம் பெற்ற உலமாக்கள் வாழைச்சேனை ஹைராத் ஜூம்ஆ பள்ளிவாயலில் இருந்து ஊர்வலமாக விழா மேடைவரை அழைத்துவரப்பட்டதுடன் அந் நஹ்ஜா சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

# ஆயிரம் கிராம வேலைத் திட்டத்தின் வடமத்திய நிகழ்வு



( எம்.ரீ.ஆரிப் )

வளமான நாடு அழகான வாழ்க்கை என்னும் தேசிய கொள்கையின் துணைத் திட்டமான சமூக சக்தி செயல் திட்டத்தின் ஆயிரம் கிராமங்களில் ஆயிரம் வேலைத் திட்டங்களின் வடமத்திய மாகாண பிரதான நிகழ்வானது அனுராதபுரம் கவரக் குளம் வன்னம்மடுவ வில் மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தலைமையில் (02) நடை பெற்றது.

இதன் கீழ் பஹல வன்னம்மடுவ பகுதி விவசாயிகளின் பல்ல-ாண்டு காலமாக தீர்க்கப்படாத பிரச்சினையாக இருந்து வரும் நெல் சாகுபடிக்கான நீர் வழங்கும் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் " உஸ்ஸான வாரி கிரம " முறையின் கீழ் நீர்ப்பாசன திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப் பட்டது.

இந்ததிட்டம் நிறைவடைந்த பின்னர் சிறுபோக மற்றும் பெரும்போகம் ஆகிய போகங்களை விவசாயிகள் மேற்கொள்ள முடியும். இத் திட்டத்தின் மூலம் 60 ஏக்கர் வயல் நிலத்திற்கு நீர் வழங்க முடியும்.

இதற்கான மொத்தச் செலவு சுமார் 100 மில்லியன் ரூபாவாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதில் இரண்டரை மில்லியன் ரூபாய் ஆயிரம் கிராமங்களில் ஆயிரம் செயல்திட்டத்தின் மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள நிதியை சமூக சக்தி மூலம் அப்பகுதி மக்களின் பங்களிப்புடன் கட்டப்படவுள்ளது .

இந்நிகழ்வின் போது, அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாக்யா ஸ்ரீ ஹேரத் உட்பட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கண்காட்சி உதைபந்தாட்ட போட்டியில் ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சீ அணி வெற்றி




(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் லிவர்பூல் அணிக்கும், ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி.அணிக்கும் இடையில் நடைபெற்ற கண்காட்சி உதைப்பந்தாட்ட போட்டியில் ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி. அணி 02:00 என்ற கோல்களினால் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்து கொண்டது.

புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை யின், 80 வருட கனவான, பஸ் ஒன்றினை பெற்றுக் கொள்வதற்காக "Bus For My Zahira" க்கான நிதி திரட்டும் திட்டத்துக்காக இந்த கண்காட்சி உதைப்பந்தாட்ட போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த போட்டியானது புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை (05) மாலை 4 மணிக்கு இடம்பெற்றது.

இடைவேளைக்கு முன்பாக இரண்டு அணிகளும் கோல்களை பெற பலத்த முயற்சிகளை மேற்கொண்டபோதும் முடியாமல் போனது.

எனினும் இடைவேளைக்கு பின்பு தனது அணியினை மேலும் பலப்படுத்திய ஏறாவூர் அணி அதிரடியாக தொடர்ந்து இரண்டு கோல்களை பெற்றுக்கொண்டது.

அவ் அணியின் முன்கள வீரர் முஹம்மது முஸ்தாக் தனது அணிக்கான 02 கோல்களையும் பெற்றுக்கொடுத்தார்.

ஏறாவூர் அணியினை அதன் பயிற்று விப்பாளர் அதிபர் மொஹிதீன் வழி நடாத்தி இருந்தார்.

லிவர்பூல் அணியினை அதன் பயிற்றுவிப்பாளர் எச்.எம்.ஹம்ருசைன் வழி நடாத்தி இருந்தார்.

இந்த கண்காட்சி போட்டியினை புத்தளம் காற்பந்தாட்ட லீக், புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை நிர்வாகம், பழைய மாணவர் சங்கத்தினர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் மாநகர சபை மேயர் பொறியியலாளர் ரின்சாத் அஹ்மத் கலந்து கொண்டார். மாநகர சபை உறுப்பினர்களான எம். டி.எம். சஹ்ரான், இப்லால் அமீன், புத்தளம் காற்பந்தாட்ட லீக் நிர்வாகிகள், சாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் ஐ.ஏ.நஜீம், டீரள குழச ஆல ணுயாசைய இணைப்பாளர் கவிஞர் "புத்தளம் மரைக்கார்", பழைய மாணவர் சங்கத்தினர், அனுசரணையாளர் கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# விவாத போட்டியில் கிண்ணியா நகர சபை முதலிடம்



உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் (04) மட்டக்களப்பு மா நகரசபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றக்களுக்கிடை யிலான விவாதப் போட்டியில் காத்தான்குடி நகரசபையும் கிண்ணியா நகர சபையும் மோதிக் கொண்டன.

இப்போட்டியில் கிண்ணியா நகரசபை 295 புள்ளிகளைப்பெற்று வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

கிண்ணியா நகர சபை தவிசாளர் எம்.எம்.மஹ்தி தலைமையில் பங்குபற்றிய இப் போட்டியில் பிரதி தவிசாளர் எம்.எஸ்.ஏ. அஸீஸ், உறுப்பினர்களான ஏ.எம்.இம்ரான், எம்.எம். ரஷாட் முகமட் ஆகியோர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாலியல் துஷ்பிரயோக விவகாரங்களும் ஆடிப் போயிருக்கும் மகா சங்கத்தினரும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்



அநுராதபுரம் அடமஸ்தான விஹாரை தேரரரான பல்லேகம ஹேமரத்ன என்பவரால் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப் பட்டமை தொடர்பாக நாட்டில் பாரியளவில் பௌத்த தர்மத்தை பாதுகாக்க வேண்டிய தேரர்களின் பொறுப்புணர்ச்சி தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது.

அரம்பத்தில் இந்த தேரர் மீது குற்றசாட்டு முன்வைக்கப்பட்ட போது அது தொடர்பாக பொலீசார் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறிய-தால் இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டு வந்ததோடு, கடுமையான முறையில் சமூக ஊடகங்களில் மஹா சங்கத்தினர் தொடர்பாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இத்தகைய குற்றச்சாட்டுக்கள் நாட்டில் புதிய விடயமல்ல. காலா காலமாக நாட்டில் ஆங்காங்கே இவ்வாறான சம்பவங்கள் நடப்பதும் அவை வெளிவாராமல் முடக்கப்படுவதும் சர்வசாதாரணமான விடயங்களாகும்.

அதனால் சட்ட நடவடிக்கை எடுக்க தாமதமடையும் போது பொலிஸார், சட்டத்துறை, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் நீதித்துறை மீதும் விமர்சனங்கள் முன்வைக்கப் படுகின்றன.

இந்நிலையில் இந்தத் தேரரைப் பாதுகாக்கும் வகையில் ஒருதரப்பு பிக்குமார் ஈடுபட்டு வருவதோடு, அரசசர்பற்ற நிறுவனங்களும் அநீதிகளுக்கும் பாதிக்கப்பட்டவர் களுக்கும் ஆதரவாக செயற்பட்டு வரும் சமூக ஊடகங்கள், சமூக செயற்பாட்டாளர்கள் பாதிக்கப்பட்ட சிறுமிக்காக நீதி வேண்டும் என்று ஆர்ப்பாட்டங்களை நடத்தி குரல் எழுப்பி வருகின்றனர். இவ்வாறாக ஆர்ப்பாட்டங்களும் விமர்சனங்களும் எழுந்த நிலையில் குறித்த பிக்கு கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார். குறித்த பிக்கு அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தேரர் சார்பாக 30 சட்டத்தரணிகள் ஆஜராகி பிக்குவுக்கு ஆதரவாக செயற்பட்டமையும் விமர்சனத் திற்குள்ளாகிய விடயமாகும். சிறுமிக்கு ஆதரவாக யாரும் இல்லையா? என்ற கேள்விகள் எழுந்தபோதே பின்னர் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதியைத் தேடிக் கொடுக்க காலம் கடந்தாவது 15 சட்டத்தரணிகள் ஆஜராகியமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



இந்த சம்பவத்தை மையமாக வைத்து பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஒரு சந்தர்ப்பத்தில் கருத்து வெளியிடுகையில், "எங்களுளைய பௌத்த விடயங்களில் கிறிஸ்தவர்களோ, தமிழர்களோ அல்லது முஸ்லிம்களோ தலையிட வேண்டியதில்லை. எங்களுடடைய விடயங்களை நாங்களே பார்த்துக் கொள்கிறோம். தவறு செய்யாதவர்கள் யாரும் இல்லை. அதனால் இது போன்ற சிறிய சிறிய விடயங்களை பெருப்பிக்க வேண்டியதில்லை" என்று எச்சரிக்கை விடுக்கும் தொனியில் கருத்து வெளியிட்டார். இந்தக் கருத்து நாட்டில் செயற்பட்டு வரும் யூரியூப் சனல்கள் மூலம் கடுமையான விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட்டது. பௌத்த புனித ஸ்தலம் ஒன்றின் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கின்ற அதுவும் பௌத்த தர்மத்தை தலைமேல் சுமந்து பாதுகாக்க வேண்டிய தலைமை தேரர் மூலமே இவ்வாறான பாரிய துஷ்பிரயோகம் நடந்தமை சிறிய விடயம் அல்ல என்ற அடிப்படையில் கடுமையாக விமர்சிக்கப்பட்டன.

பின்னர் மறுநாள் ஞானசார தேரர் மீண்டும் ஊடங்களில் தோன்றி உடனடியாக இந்த தேரர் பதவியில் இருந்து விலக்கப்பட வேண்டும் என்று பெல்டி அடித்தார்.

எவ்வாறோ இந்த சம்பவம் தொடர்பாக நடைபெறும் விசாரணைகள் குறித்து பலதரப்பட்ட தரப்பில் இருந்தும் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

எதுவானாலும் தற்போது இந்த விடயம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள வழக்கு காரணமாக அது தொடர்பாக விமர்சனம் செய்ய முடியாது.

ஆனாலும் இங்கு பேச வேண்டிய விடயம் நாட்டில் ஆங்காங்கே நடைபெறும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாகவும் அவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக எடுக்கப்படுகின்ற சட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆகும். அண்மையில் பெண்ணியம் சார்பான ஓர் அமைப்பு தகவல் தெரிவிக்கையில், "2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குள் மாத்திரம் 488 பௌத்த பிக்குகளுக்கு எதிராக பாலியல் துஷ்பிரயோக குற்றச் சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றில் மிகவும் குறைந்த எண்ணிக் கையிலான குற்றச்சாட்டுக்கள் குறித்து மாத்திரமே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

எவ்வாறாயினும் அடமஸ்தானாதிபதி தொடர்பாக இவ்வாறாக குற்றச்சாட்டுக்கள் இருந்தாலும் மறுபுறமாக இந்த சிறமியை அவரின் தாயார் கடந்த இரண்டு வருடங்களாக இவ்வாறு ஆண்களுக்கு பணத்திற்காக விற்பனை செய்து வந்துள்ளார் என்றும் அந்த வரிசையிலே குறித்த தேரருக்கும் சுவைப்பதற்காக கொடுக்கப்பட்டிருக்கலாம் என்றும் நியாயங்கள் முன்வைக் கப்படுகின்றது. அந்த காரணத்தை அடிப்படையாக வைத்து சிறுமியை ஒரு விபச்சாரத்தில் ஈடுபட்டவர் என்று குற்றச்சாட்டை திசை திருப்பி தேரரை பாதுகாக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன. இந்த விவகாரம் வெளிச்சத்திற்கு வந்ததும் பெண்ணிய அமைப்புக்கள் கடுமையாக சீற்றத்தை வெளிப்படுத்தி உள்ளன. குறித்த சம்பவம் தொடர்பாக 11 வயது சிறுமியின் தாயாரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருந்த நிலையில், பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த விடயம் நாட்டில் பரந்தளவிலான பேசுபொருளாக மாறி இருப்பதால், பௌத்த சமூகத்தில் மஹாசங்கத்தினரும் மௌனம் சாதித்தமை குறித்தும் பலதரப்பட்ட பிரிவுகளில் இருந்து கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதற்காக பௌத்த பிக்குமாருக்கென்று தனியான ஒரு விசாரணைப் பிரிவு அல்லது பிக்கு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த விசாரணைப் பிரிவு மகாசங்கத்தின் கண்காணிப்பில் இயங்க வேண்டும். பிக்குமார் அல்லது தேரர்கள் தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் வந்தால் விசயம் வெளியே போகாமல் பார்த்துக் கொள்ள வசதியாக அமையலாம் என்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இராணுவத்தில் இருக்கும் அதிகாரிகள் குற்றமிழைத்தால் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க இராணுவ நீதிமன்றம் இருப்பது போன்றதொரு அமைப்பாக இது அமைய வேண்டும் என்று ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். அண்மையில் 21 பிக்குகள் போதைப் பொருட்களுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பிடிபட்ட போதும் ஊடகங்கள் மூலம் பௌத்த பிக்குகளின் செயற்பாடுகள் விமர்சனத்ததிற்குட்ப டுத்தப்பட்டன. அந்த சூடு தணிய முன்னரே இந்த பாலியல் குற்றச்சாட்டு வந்திருக்கின்றது.

அதேநேரம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இறக்காமம் என்ற பிரதேசத்தில் மௌலவி ஒருவர் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. ஆனாலும் குறித்த நபர் ஒரு மௌலவி அல்ல என்பதை அப்பிரதேச ஜம்இய்யதுல் உலமா சபை அறிவித்திருக்கின்றது. இவ்விடயம் தொடர்பாக கடந்த 2026.06.01 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலும் கேள்வி எழுப்பப்பட்டது. ஆனாலும் ஊடக அமைச்சர் பதிலளிக்கையில் குறித்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் வழங்கி இருந்த தகவலின் அடிப்படையிலேயே குற்றச் செயலை புரிந்ததாக கூறப்பட்ட நபர் மௌலவி என்று பதிவாகி இருந்ததாக விளக்கமளித்தார்.

இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் இந்து மதம் என்ற வேறபாடுகள் இல்லாமல் அடிக்கடி மதகுருக்கள் மீதும் விஹாரைகள், மத்ரசாக்கள், தேவாலயங்கள் என்று வேறுபாடு இல்லாமல் சுமத்தப்பட்டு வருகின்றன. அதனால் இத்தகைய சம்பவங்கள் எங்கு நடந்தாலும் கண்டிக்கப்பட வேண்டிய பாரிய குற்றச் செயல்களாகும். இத்தகைய சம்பவங்கள் தொடர அனுமதிக்க முடியாது. வேலியே பயிரை மேயும் நிலை நாட்டில் ஏற்படுமானால் சிறுவர் துஷ்பிரயோகம் என்ற விடயம் சர்வசா தாரணமான விடயங்களாக மாறலாம்.

குறிப்பாக இஸ்லாமிய மத்ரசாக்களில் இவ்வாறான சம்பவங்கள் நடப்பதாக தகவல்கள் வெளியாகும் போது ஒருசில மதபோதகர்களின் விசமத்தனமான செயற்பாடுகள், நடவடிக்கைகள் காரணமாக பெற்றோர் மத வழிபாட்டுத்தளங்கள் பற்றிய சந்தேகங்களை வளர்த்துக் கொண்டு எப்போதும் தீய சிந்தனையோடு பார்க்கின்ற நிலை உருவாகலாம். எந்தவொரு சமூகத்திலும் அனுமதிக்காத இவ்வாறான சம்பவங்கள் குறித்த மதங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் மனக் கிலேசத்தை ஏற்படுத்துவதோடு, நம்பிக்கை இழப்பதற்கும் காரணமாக அமைகின்றன. இவ்வாறான ஒரு சம்பவம் மத்ரசாவொன்றில் நடைபெற்றால் அந்த மத்தரசா குறித்து மக்கள் அஞ்சும் நிலை ஏற்படலாம். ஒருசில மௌலவிமாரின் பொறுப்பற்ற நடத்தை சமுகத்தில் மௌலவிமாருக்கு இருக்கின்ற கண்ணியத்தையும் நன்மதிப்பையும் சிதைப்பதற்குக் காரணமாக அமைகின்றது.

அத்துடன் இவ்வாறான சம்பவம் ஒன்று நடந்து அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படா விட்டாலும், உரிய அதிகாரிகள் குறித்த சம்பவங்களை கவனத்ததில் எடுக்கப்படாவிட்டாலும் இன்றைய நிலையில் சமூக ஊடகங்கள் விழிப்பாக இருந்து வருவதால் தவறிழைப்பவர்களால் பிழைகளை செய்துவிட்டு ஒருபோதும் தப்பி வாழ முடியாது. எப்படியும் சட்டத்தின் பிடியில் சிக்க வேண்டிய நிலை ஏற்படுவதோடு, அதனால் அத்தகையவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களுக்கும் அல்லது மத ஸ்தலங்கள், கல்வி நிலையங்களுக்கும் பாரிய அவப்பெயர் ஏற்படுகின்றது என்பதையும் ஒவ்வொருவரும் மனதில் வைத்திருக்க வேண்டும். அதனால் சமூகம் விழிப்புடன் இருக்க வேண்டும். மதகுருமார் மட்டுமல்ல, பொது வாழ்க்கையில் எல்லாத் தரப்பினரும் தெளிவான சிந்தனை யுடன் பொறுப்புணர்வுடன் கரும மாற்ற வேண்டி இருக்கின்றது.

அதேநேரம் இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக அறிக்கையிடும் தகவல் வெளிப்படுத்தும் ஊடகங்கள் மீதும் தார்மீகப் பொறுப்பு இருந்து வருவதை மறந்துவிட முடியாது. ஊடக சுதந்திரம் இருக்கிறது என்பதற்காக சமூக பொறுப்புணர்வை மறந்த நிலையில் தகவல் வெளிப்படுத்துவது ஆபத்தானதாகும். ஒரு சில சம்பவங்களை அடிப்படையாக வைத்து ஒட்டுமொத்த சமூகங்க ளையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவது, மதங்களை அவதூறு அல்லது அவமதிக்கும் வகையில் விமர்சிப்பது, கருத்துக்களை வெளியிடுவது குறித்த சம்பவங்களை அடிப்படையாக வைத்து வெறுப்பூட்டும் வகையில் பிரசாரங்களைச் செய்வது போன்ற செயற்பாடுகள் உண்மையான ஊடக தர்மமாக அமைவதில்லை. அத்துடன் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளு க்கும் பூசல்களுக்கும் வழிவகுப்பதாக அமைகின்றது. ஊடகங்களின் பொறுப்பாக அமைவது எப்போதும் நடந்த சம்பவம் தொடர்பாக சரியாக ஆராய்ந்து தேடிப்பார்த்து ஆதாரபூர்வமாக நிலைமைகளை மக்களுக்கு புரிய வைப்பதும் தெளிவை ஏற்படுத்தும் வகையில் தகவல் வழங்கும் பணியைச் செய்வது மாகும். ஒருபோதும் மக்கள் மத்தியில் சந்தேகங்கள், தெளிவின்மைகளுக்கு உட்பட விடயங்களை முன்வைத்து பிரச்சினைகளை ஏற்படுத்த ஊடகங்களோ, ஊடகவியலாளர்களோ காரண கர்த்தாக்களாக இருக்கக் கூடாது.

# அமேசன் கல்லூரிக்கு மேலும் ஒரு அரச அங்கீகாரம்

ஆரம்பக் குழந்தைப் பருவக் கல்வித் துறையில் முன்னணி கல்வி நிறுவனமாக விளங்கும் அமேசன் கல்லூரிக்கு முன்பள்ளி டிப்ளோமா பாடநெறிக்கான (Pre School Diploma) அரச அங்கீகாரத்தினை மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு வழங்கியுள்ளது.

இந்த அங்கீகாரத்துக்கான ஆவணங்கள் வழங்கும் நிகழ்வு கொழும்பு பத்தர முல்லையில் அமைந்துள்ள மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சில் அமைச்சர் போல் ராஜ் மற்றும் பிரதி அமைச்சர் டாக்டர் நாமல் சுதர்ஷன ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரிடத்தில் இருந்து அமேசன் கல்லூரி மற்றும் அமேசன் கேம்பஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் இல்ஹாம் மரைக்கார் உத்தியோகபூர்வமாக இந்த ஆவணங்களை பெற்றுக் கொண்டார்.

முன்பள்ளி மற்றும் ஆரம்பக் குழந்தைப் பருவக் கல்வி டிப்ளோமா பாடநெறி இலங்கையின் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய ஆரம்பக் குழந்தைப் பருவ அபிவிருத்தி செயலகத்தில் (NSECD) 2026 முதல் 2029 வரையிலான காலப்பகுதிக்காக அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அங்கீகாரத்தின் மூலம் குறித்த டிப்ளோமா பாடநெறி தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் திட்டமாக அமைந்துள்ளதுடன், மாணவர்களுக்கு தரமான மற்றும் தொழில் துறைக்கேற்ற கல்வியைப் பெறும் வாய்ப்பையும் வழங்குகிறது.



மேலும், ஆரம்பக் குழந்தைப் பருவக் கல்வித் துறையில் தொழில் வாய்ப்புகளை எதிர்பார்க்கும் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் கல்விச் சேவையில் ஈடுபட விரும்புவோருக்கு இந்தப் பாடநெறி சிறந்த அடித்தளமாக அமையும் என முகாமைத்துவ பணிப்பாளர் இல்ஹாம் மரைக்கார் தெரிவித்தார்

அத்துடன், இப்பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ், சொந்த முன்பள்ளி (Pre-School) ஒன்றை ஆரம்பிப்பதற்கான மேலதிக தகுதி ஆவணமாகவும் பயன்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

கல்வித் துறையில் தரநிலைகளை மேம்படுத்தும் நோக்கில் செயல்பட்டு வரும் அமேசான் கல்லூரி, எதிர்கால கல்வியாளர்களை உருவாக்கும் பணியில் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாகவும் அமேசன் கல்லூரி மற்றும் அமேசன் கேம்பஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் இல்ஹாம் மரைக்கார் தெரிவித்தார்.

# சாய்ந்தமருது அல்ஹிலாலில் அதிபர்களின் பிரியாவிடை நிகழ்வு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சாய்ந்தமருது கமு/கமு/ அல்ஹிலால் வித்தியாலயத்தில் அதிபராக, பிரதி, உதவி அதிபர்களாகக் கடமையாற்றி, பிரதேசத்தின் ஏனைய பாடசாலைகளுக்கு அதிபராக, பிரதி அதிபர்களாக இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர்களின் பிரியாவிடை நிகழ்வு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

பாடசாலை கல்வி சமூகத்தின் ஏற்பாட்டில், பாடசாலையின் அதிபர் கே.எல்.ஏ. ஜௌபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பொறியியலாளர் எம்.சி. கமால் நிஷாத் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி, இடமாற்றம் பெற்று தற்போது சாய்ந்தமருது அல்-கமரூன் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றும் எம்.எச். நுஷ்ரத் பேகம், பிரதியதிபராகக் கடமையாற்றி, தற்போது நிந்தவூர் இமாம் றூமி வித்தியாலயத்தில் அதிபராகப் கடமையாற்றும் ஏ.பி. செரோன் டில்ராஸ், உதவி அதிபராகப் கடமையாற்றி, தற்போது மாளிகைக் காடு சபீனா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றும் எஸ்.எம். உவைஸ் ஆகிய இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர்களுக்கு அவர்களது அர்ப்பணிப்பான சேவையைக் கௌரவிக்கும் முகமாக நினைவுச் சின்னங்களும் அன்பளிப்புகளும் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.



அத்துடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பொறியியலாளர் எம்.சி. கமால் நிஷாத்தின் மகன் அல்ஹாபிழ் கே.எம். ஷைடீபான் நமி மிகக் குறுகிய காலத்தில் அல்குர்ஆனை மனனம் செய்து அல்ஹாபிழ் பட்டம் பெற்றமைக்காக இதன்போது பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பொறியியலாளர் எம்.சி. கமால் நிஷாத் தன் மனம் கோணாது பாடசாலைக்கு உதவி என்று வருகின்ற போது, எந்த உதவியாக இருந்தாலும் அதனை இன் மனங்கொண்டு ஏற்று, சளைக்காது செய்துவரும் அயராத, அர்ப்பணிப்பான அவரது அரும் பெரும் சேவைக்காக பாடசாலை சமூகத்தால் பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.அஸ்மா மலிக், சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலை வைத்தியர் டாக்டர் நஸ்ரின் சாஜிதா, கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். பைஸல், சாய்ந்தமருது மழ்ஹருஸ்ஸம்ஸ் மகா வித்தியாலய அதிபர் எம்.சி. நஸ்லின் றிப்கா, கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.எம்.எம்.அன்சார், பாடசாலையின் பிரதியதிபர்களான எம்.எச். லாபிர், ஏ.பி. ரோஷன் டிப்ராஸ், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், மாணவர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்வி சாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# முக்மின் தலைவராக தேர்வான டத்தோ வீராவுக்கு சிங்கப்பூர் ரோயல் கிங்ஸ் குழுமம் வாழ்த்து

**(திருச்சி சாகுல்ஹமீத்)**

முக்மின் அமைப்பின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள டத்தோ வீரா ஷாகுல் தாவூத்க்கு, சிங்கப்பூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ரோயல் கிங்ஸ் குழுமத்தின் நிறுவனரும் தலைவருமான சிராஜுதீன் தனது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார்.




இது குறித்து சிங்கப்பூர் ரோயல் கிங்ஸ் குழுமத்தின் நிறுவனரும் தலைவருமான சிராஜுதீன் வாழ்த்து செய்தியில் கூறியதாவது, "சைபர் ஜெயா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முக்மின் அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள டத்தோ வீரா ஷாகுல் தாவூதுக்கு எனது சார்பிலும், சிங்கப்பூரைச் சேர்ந்த ரோயல் கிங்ஸ் குழுமத்தின் சார்பிலும் உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக, கல்வி, தொழில்துறை மற்றும் பொதுநலத் துறைகளில் நீண்டகால அனுபவம் கொண்ட அவர், தனது தலைமைத்துவத்திறன், தொலை நோக்குப் பார்வை மற்றும் சமூக அக்கறையின் மூலம் முக்மின் அமைப்பை மேலும் வலுப்படுத்துவார் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது.

அவரது தலைமையின் கீழ் முக்மின் அமைப்பு மலேசியா, இந்திய முஸ்லிம் சமூகத்தின் கல்வி, பொருளாதாரம், தொழில்முனைவு மற்றும் சமூக மேம்பாட்டிற்காக பல்வேறு புதிய முயற்சிகளை முன்னெடுத்து குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கும் என நம்புகிறேன்.

டத்தோ வீரா ஷாகுல் தாவூத் அவர்களுக்கும், புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள செயற்குழு உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் பதவிக்காலம் வெற்றிகரமாக அமைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# ஜேர்மன் நாட்டு உயர்ஸ்தானிகருடன் திருகோணமலை மாநகர சபை முதல்வர் மற்றும் பிரதி முதல்வரின் உத்தியோகபூர்வ சந்திப்பு





**( எம்.ஏ.முகமட்)**

இலங்கைக்கான ஜேர்மன் நாட்டு உயர்ஸ்தானிகர் டாக்டர். பெலிக்ஸ் நேயுமான், திருகோணமலை மாநகர சபையின் முதல்வர் க. செல்வராசா, பிரதிமுதல்வர் நெ. மு. மஹ்சூம் மற்றும் மாநகர ஆணையாளர் ஆகியோருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பொன்று (02 ) இடம்பெற்றது.

இச்சந்திப்பில் திருகோணமலை மாநகர சபையின் தற்போதைய நிலை, எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மக்களின் நலனுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலின் போது, திருகோணமலை மாநகரப் பகுதிக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நகர அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வது மற்றும் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புகளை விரிவுபடுத்துவது தொடர்பாக கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

அத்துடன், மாநகர சபை தற்போது எதிர்நோக்கும் நிர்வாக சவால்கள், நிதி வளங்களின் பற்றாக்குறை, திடக்கழிவு முகாமைத்துவம் உள்ளிட்ட மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகள் உயர்ஸ்தானிகரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

மேலும், திருகோணமலையின் நிலையான அபிவிருத்தி மற்றும் கட்டமைப்பு வளர்ச்சிக்காக ஜேர்மன் அரசாங்கத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய சாத்தியமான உதவிகள், தொழில்நுட்ப ஒத்துழைப்புகள் மற்றும் எதிர்கால இருதரப்பு கூட்டுறவுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

# சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் மாத்தளையில் விழிப்புணர்வு பேரணி



**(எம்.சதூர்தீன்)**

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணர்களால் மாத்தளை நகரில் விழிப்புணர்வு எதிர்ப்பு பேரணி ஒன்று நடாத்தப்பட்டது.

இதன் போது ஆரம்ப நிகழ்வாக மாத்தளை விஜய கல்லூரி மண்டபத்தில் மாணவர்களுக்கு புகையிலை, புகைத்தல் மற்றும் போதைப்பொருள் தடுப்பது தொடர்பான விளக்கவுரை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மாணவர்களது விழிப்புணர்வு பேரணி மாத்தளை விஜய கல்லூரி வளாகத்தில் இருந்து ஆரம்பமாகி மாத்தளை நகர்வலம் சென்றது.

இப்பேரணியில் பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரம் வழங்கி புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கும் எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இப்பேரணியில் பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க கலந்து கொண்டாமை சிறப்பம்சமாகும்.

# ஈரானின் வெற்றியை ஏற்றுக் கொள்ள இயலாத நிலையில் உலக மகா வல்லரசு...



எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist, Chennai - Tamilnadu, India)

ஈரான் அமெரிக்கா இடையேயான பேச்சுவார்த்தை முற்றிலுமாக தோல்வி அடைந்து நிலையில் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த குவைத்தின் விமான நிலையம் மீது நடந்த தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ள நிலையில் 60-க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். குவைத் மீதான இந்த தாக்குதலுக்கு ஈரான் 13 பாலி ஸ்டிக் ஏவுகணை மூலம் 16 ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் இந்த தாக்குதல் மூலம் அமெரிக்கா நிலைகள் மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை சந்தித்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் அமெரிக்கா ராணுவ தலைமை இதனைத் முற்றிலுமாக மறுத்துள்ளது. இந்த தாக்குதல்களை "இரானின் கிரிமினல் அத்துமீறல்" என குவைத்தின் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் குறிப்பிட்ட நிலையில் தூதரகங்கள் சேதமடைந்துள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குவைத் விமான நிலைய தாக்குதலுக்கு பொறுப்பேற்க மறுத்த ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை (ஐஆர்ஜிசி), அமெரிக்க ஏவுகணை இடைமறிக்கும் அமைப்பில் ஏற்பட்ட பிழையால் சேதங்கள் ஏற்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கிறது. அமெரிக்கா பேட்ரியாட் ஏவுகணை தொழில்நுட்ப கட்டமைப்பு ஏற்பட்ட பழுது காரணமாக இந்த சேதாரம் ஏற்பட்டுள்ளது என்று கூறி உள்ளது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இந்தக் கூற்றை தவறு எனக் கூறிய அமெரிக்க ராணுவத்தின் மத்திய கட்டளை மையம் (சென்ட்காம்), விமான நிலையத்தை "வேண்டுமென்றே, திட்டமிட்டு, நியாயமற்ற முறையில்" இரான் தாக்கியதாகவும் கூறுகிறது. அதேநேரத்தில் ஈரான் தரப்பில் ஏராளமான பொய்களை தொடர்ந்து கூறி வருகின்றனர் என்று அமெரிக்கா சென்ட் காம் தலைமை கூறி வருவதை காண முடிகிறது.அமெரிக்க ராணுவ தளங்கள் அமைந்துள்ள பஹ்ரைன் மற்றும் குவைத் மீது இரான் தொடர்ந்து இலக்குகளைத் தாக்கியுள்ளது.அமெரிக்கா மற்றும் இரான் இடையே போர்நிறுத்த பேச்சுவார்த்தைகள் முடங்கி போரை நிறுத்துவதற்கான ஒப்பந்தம் ஏற்படாத நிலையில் இந்த தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டு நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன சதி திட்டம் ஆகி வருவதாக ஈரான் தகவல்கள் வெளியாகி உள்ளன.இந்த சண்டையின் மூலம் ஹோர்முஸ் நீரிணை, அதிகம் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை நீக்குவது மற்றும் இரானின் அணுசக்தி திட்டம் மீதான பேச்சுவார்த்தைகளை மீண்டு தொடங்குவதற்கான கட்டமைப்பை உருவாக்குவது ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருக்கிறது

ஈரான் ஏவுகணை தொழில்நுட்ப கட்டமைப்பு மூலம் உலகின் மிகப்பெரிய அளவிலான சாதனை படைத்துள்ளது என்று சர்வதேச வல்லுநர்கள் கூறுகின்றனர். கடந்த 20 ஆண்டுகளாக நிலத்தடி ஏவுகணை நகரங்களை உருவாக்கி வெற்றி பெற்று உள்ளது அமெரிக்காவால் எந்தவொரு நிலையிலும் அடையாளம் காண முடியாத நிலையில் உண்மையில் அமெரிக்கா ராணுவம் இந்த போரில் சந்தித்த பெரும் பின்னடைவை உலகின் பல்வேறு நாடுகளில் மிகப் பெரிய அளவில் ஆன அதிர்ச்சி தரும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக 100 க்கு மேற்பட்ட மலைகள் கீழ் குடையப்பபட்ட மலைகள் கீழ் ஏவுகணை தொழில்நுட்ப கட்டமைப்பு அமெரிக்கா சர்டிலைட் மூலம் கண்டுபிடிக்க இயலாது நிலையில் பெரிய சவாலாக அமைந்துள்ளது என்பதே யதார்த்தமான உண்மையாகும். தற்போதைய நிலையில் 69 மலை நகரங்கள் ஏதாவது ஒன்றை நகர்ந்தால் கூட மற்றவை இயங்க கூடிய அளவில் செயல்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி





உள்ளன.

ஈரான் முழுமையாக மலைகள் சூழ்ந்த நகரங்கள் கொண்ட பகுதியாகும். அமெரிக்கா குண்டுகளால் துளைக்க முடியாது ஈரான் மலைகள் மூலம் உருவாக்கப்பட்ட வழி பல்வேறு பாதைகள்... அமெரிக்கா என்ன வெல்லலாம் செய்வார்கள் என்பதை நன்கு தெரிந்த நிலையில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகளும் மலைகள் வாயிற் புறச் வழிகளைக் மட்டுமே தாக்கி அளிக்க முடிந்தது.ஆனால் ஈரானின் மறைமுக ஏவுகணை தொழில்நுட்ப சாதனங்கள் முழுமையாக ஆழப்படுத்தப்பட்ட அளைளடைந உவைல'ள ஒரு போதும் தகர்க்க சாத்தியம் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும் . இனி வரும் காலங்களில் மத்திய கிழக்கு நாடுகள் தாக்குதலுக்கு தொடர்ந்து உள்ளாகும் என்று பெரும்பாலான சர்வதேச அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். அதே நேரத்தில் அவர்களுடைய கருத்துகள் அடிப்படையில் ஈரான் பிராந்திய வல்லரசு நாடாக மாறிவிடும் என்பதே அவர்களால் சுட்டி காட்டப்பட்டு வருகிறது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

ஈரான் அமெரிக்காவின் நடவடிக்கைகள் சமாதானம் செய்ய முடியாது என்பதே அவர்களின் இந்த திட்டம் முழுமையாக வடிவமைப்பு செய்யப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது . அமெரிக்கா சர்டிலைட் தொழில்நுட்ப சாதனங்கள் மூலம் கூட எந்தவொரு நிலையிலும் ஈரானின் ராணுவம் மற்றும் ஏவுகணை தளங்களை அடையாளம் காண முடியாத நிலையில் ஈரான் மிகுந்த வல்லமை கொண்ட தேசம் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதேநேரத்தில் ஈரான் எந்தவொரு நிலையிலும் தங்கள் நாட்டின் இறையாண்மையை விட்டு கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை என திட்டவட்டமாக தெரிவித்து விட்ட நிலையில் அமெரிக்கா ஈரான் உடன் தொடர் போரைத் தொடர்ந்து நடத்த இயலாத நிலையில் கையை பிசைந்து கொண்டு நிற்கிறது என்பதே யதார்த்தமான நிலையாகும்.

இது போன்ற சிக்கலான ஒரு பரிணாமத்தை அடைந்துள்ள இந்த போரின் அடுத்த கட்ட நகர்வுகள் மிகவும் முக்கியமான காரணியாக விளங்குகிறது என்பதே யதார்த்தமான உண்மையாகும்.இதற்கிடையில் ஈரானில் ஏற்பட்ட இஸ்லாமிய புரட்சியின் நிறுவனர் அயதுல்லா ருஹோல்லா கோமேனியின் 37-வது நினைவு நாளையொட்டி மொஜ்தபா கமேனி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த அறிக்கை, அயதுல்லா ருஹோல்லா கோமேனியின் நினைவிடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத போதகரால் வாசிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதையடுத்து, இந்த அறிக்கை மொஜ்தபா கமேனியின் எக்ஸ் பக்கத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அவர், "அமெரிக்காவின் தலைமையில் இயங்கும் ஏகாதிபத்திய சக்திகள் கடந்த 80 ஆண்டுகளாக இஸ்ரேல் என்ற பெயரில் ஒரு ராணுவ தளத்தை உருவாக்கியுள்ளன. போலியானதும், சட்டவிரோதமானதுமான அந்த இஸ்ரேலின் கிழக்கே, வலிமையான, சுதந்திரமான ஈரான் எனும் தேசம் இருப்பதை ஏற்க மறுக்கிறது. ஈரானின் முன்னேற்றத்தை தடுப்பதற்காக ஏகாதிபத்திய சக்திகள் எதையும் செய்ய தயாராக உள்ளன. அந்த தீய எதிரி, ஈரானின் ஆயுதப்படை வீரர்களுடனான நேரடி மோதலில் தோல்வியைச் சந்தித்துள்ளது. ராணுவ ரீதியிலான போர்க்களங்களிலும் சரி, ஈரானின் தெருக்களிலும் சரி அது ஒரு தீர்க்கமான அடியை வாங்கி இருப்பதால் தற்போது அவமானத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. அந்த எதிரி, இரண்டு முக்கிய அம்சங்கள் மீது தனது சதித் திட்டத்தை தீட்டி வருகிறது. ஒன்று, ஈரான் மக்களின் மனவுறுதியை சிதைப்பது. மற்றொன்று, நாட்டின் அதிகாரிகளின் முடிவெடுக்கும் திறனில் பாதிப்பை ஏற்படுத்துவது. இதற்காகவே, சந்தேகம், விரக்தி, அச்சம், அவநம்பிக்கை, பிளவு ஆகியவற்றின் விதைகளை அவர்கள் விதைக்கிறார்கள். எதிரியின் தீய நோக்கங்களை உணர்ந்து நாட்டு மக்கள் அனைவரும் அந்த சதித்திட்டத்தை தகர்த்தெறிய வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

முஜ்தபா மெய்மெனி அறிக்கை வெளியான நிலையில் ஒட்டு மொத்த சர்வதேச நாடுகள் இனி வரும் காலங்களில் அமெரிக்கா மேலாதிக்கத்தை முற்றிலுமாக துடைத்து ஏறி வேண்டும் என்பதில் ஈரான் உறுதியாக செயல்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

இந்த நிலையில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மொத்ஜபா காமனெயியைச் சந்திப்பீர்களா என்கிற கேள்விக்குப் பதிலளித்த டிரம்ப், "நான் அவரைச் சந்திக்க ஆசைப்படுகிறேன். எல்லாம் எப்படி அமைகிறது என்பதைப் பொறுத்து, நாங்கள் ஒருவேளை எப்போதாவது சந்திப்போம்."அதேநேரத்தில் ஈரானுக்கு தாங்கள் பதிலடி கொடுத்து வருவதாக அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போதைய வெள்ளை மாளிகையில் தெரிவித்தார் குவைத் விமான நிலையத்தில் வெடிப்பு... அமெரிக்கா பேட்ரியாட் ஏவுகணை தாக்குதல் பாதுகாப்பு முறைமைகள் ஏற்பட்ட பழுது என்று ஈரான் கூறி வருகிறது. ஈரான் மற்றும் அமெரிக்கா நட்பு நாடுகள் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு நாடுகளும் தோல்வி அடைந்தது வரும் நிலையில் ஈரான் மக்களின் இடையே பதட்டம் ஏற்படுத்த முயலுவதாக முஜ்தபா மய்மெனி வேண்டு கோள் விடுத்து இருப்பது வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது

உச்சபட்ச தலைவர் அயதுல்லா கொய்மேனி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தும் வகையில் கூடிய நிலையில் அமெரிக்கா வை பலி வாங்கியே ஆக வேண்டும் என்று கடும் முழக்கங்கள் எழுந்து வருவதைக் காணலாம்.இது தான் ஈரான் மக்களின் மனநிலை ஆக இருந்து வருகிறது என்பதை யாதர்த்தமான நிலையாகும்.

இதற்கிடையில் செவ்வாய்கிழமை நாடாளுமன்றத்தில் பேசிய அமெரிக்க வெளியுறவு செயலாளர் மார்கோ ஷரூபியோ, பேச்சுவார்த்தை நடத்துபவர்கள் ஹோர்மூஸ் நீரிணையைத் திறப்பதற்குப் பதிலாக இரானுக்கு பொருளாதார தடைகளில் இருந்து நிவாரணம் அளிக்கவில்லை எனத் தெரிவித்திருந்தார்.தற்போது அவர்களிடம் விவாதிக்கப்படுவதெல்லாம், பொருளாதார தடைகளில் அளிக்கப்படும் விலக்குகள் அனைத்தும் நிபந்தனைகளைப் பொருத்தது தான். அவை அந்தப் பொருளாதார தடைகள் எதனால் முதலில் விதிக்கப்பட்டன என்கிற காரணத்துக்கு மாற்றாகவே அவை அமைய முடியும். அந்தக் காரணம் அவர்களின் அணுசக்தி திட்டம் தான்," என்கிறார் மார்கோ ஷரூபியோ.மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கான அமெரிக்காவின் உத்தி பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், "போர் முடிந்துவிட்டது." என்று தெரிவித்தார்.

ஈரானின் ராணுவ பலம் மூலம் உலகின் பல்வேறு நாடுகளிலும் புதிய சக்தி பிறப்பதற்கு அதிக அளவில் வாய்ப்புகள் உள்ளன என்பதே உண்மையாகும். அமெரிக்கா ஒப்பிடும்போது ஈரான் மிகவும் சிக்கலான காலகட்டத்தில் 4 தசாப்தங்களாக கடந்து வாழ்ந்து வருகின்றனர். உலகின் பார்வையில் ஈரான் தனித்து விடப்பட்ட நிலையில் இந்த போர் ஈரானுக்கு மட்டுமல்லாமல் அடக்குமுறைக்கு எதிரான மனநிலை கொண்ட நாடுகளுக்கு ஒரு விடியலை தரக்கூடிய வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நாம் கற்பனை செய்து கூட பார்க்க இயலாத அளவிற்கு மிகப் பெரிய அளவில் ஆன பொருட் செலவில் அமெரிக்கா ராணுவ நிலைகளை உலகின் பல்வேறு பகுதிகளில் விரிவாக்கம் செய்து வரும் நிலையில் இனி வரும் காலங்களில் அமெரிக்கா மிகப் பெரிய அளவில் ஆன பொருளாதார பின்னடைவை சந்திக்கும் வகையில் சர்வதேச அளவில் கள சூழல் முழுமையாக மாறும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

ஏனெனில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆசிய நாடுகளில் பெரும்பாலானவை வரும் நாட்களில் ஈரானின் தொழில்நுட்ப சாதனங்களை மலிவான விலையில் வாங்கலாம் என்கிற நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியம் ஏதுமில்லை என்பது தான் இன்றைய யதார்த்தமான நிலையாகும்.

இந்த போர் தற்போது 100 நாட்களை நெருங்கிய நிலையில் அமெரிக்கா வெற்றியை அவர்களாகவே அவர்களுக்கு அறிவிப்பு செய்து கொள்ளக்கூடிய பரிதாப நிலை உலக வல்லரசுக்கு ஏற்படும் என்பதை உலகின் எந்தவொரு தேசமும் கற்பனை செய்து கூட பார்த்து இருக்க வாய்ப்பே இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்..

# பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எச்.எம்.எம். ஹரீஸ் ஒரு இனவாதி இல்லை என்ற கருத்தினை மறுக்கின்றோம்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன்

எமது மக்களை புலி சாயம் பூசி இன்னும் எம்மக்களை பிரித்தாளக் கூடாது.சில அரசியல்வாதிகள் அதனை தொடர்ச்சியாக பயன்படுத்திவருவதை இட்டு நாங்கள் மனவேதனை அடைகின்றோம்.இந்த நாட்டில் உள்ள சகலரும் ஒரு நாட்டின் பிரஜைகள் என்ற ரீதியில் தான் எல்லோருக்கும் சமத்துவமான உரிமைகள் கிடைக்கப் பெற வேண்டும் என்பதன் ஊடாகவே கல்முனையினை நாங்கள் பார்க்கின் றோம் என அம்பாறை மாவட்ட இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

சமகால அரசியல் தொடர்பில் (03) இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கல்முனைத் தொகுதி தலைவர் சட்டத்தரணி நிதான்சன் பங்கேற்புடன் கல்முனை பகுதியில் விசேட செய்தியாளர் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டு செய்தியாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்ட தாவது..

அம்பாறை மாவட்டம் மூன்று இனங்கள் வாழும் சமூகமாக இருக்கின்றோம்.இந்த நாட்டில் இனரீதியான பிரச்சினைகள் இருந்தாலும் நாங்கள் வாழ வேண்டும் என்பதற்காக நாட்டில் உள்ள இரு இனங்களுடன் இணைந்து வாழ்கின்றோம்.

இலங்கை தமிழரசுக் கட்சியானது சிறுபான்மை இன விடுதலைக்காக நீண்ட காலம் பயணித்த ஒரு கட்சியாகும்.இதே வேளை கல்முனை பிரதேசம் சம்பந்தமாக இங்கு கூற வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.கல்முனை பிரதேசம் என்பது




முஸ்லீம் மக்கள் பெரும்பான்மை யாகவும் தமிழ் மக்கள் சிறுபான்மை யாகவும் வாழுகின்ற இடமாகும். ஆனால் 1989 ஆண்டு முதல் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் யாவரும் அறிவீர்கள். இப்பிரதேச செயலகம் குறித்து எமது தமிழ் தேசிய தலைவர்களும் முஸ்லீம் தலைவர்களும் பல்வேறு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தோம். இந்த முயற்சி எமக்கு கை கூடாத சூழ்நிலையில் தான் நீதிமன்றத்தை நாடி இருந்தோம்.

அந்த அடிப்படையில் தமிழ் முஸ்லீம் மக்கள் இணைந்து வாழ வேண்டும் என்பதற்காக எமது பயணத்தை மேற்கொண்டிருக்கின்றோம்.

இன்று இம்மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எச்.எம்.எம். ஹரீஸ் பல கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார். அவரது அக்கருத்துக்களை பார்க்கின்ற போது இனவாதமாக கூறிவிட்டு அவர் தான் ஒரு இனவாதி இல்லை என்ற கருத்தினை முன்வைத்திருக்கின்றார்.

உண்மையில் நாங்கள் அதை மறுக்கின்றோம். நிச்சயமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை பொறுத்தவரை தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள்.அவர்களும் ஒரு நிர்வாக கட்டமைப்பினுள் சகல உரிமைகளையும் சகல சலுகைகளையும் பெற்று வாழ வேண்டும் என விரும்புகின்றார்கள்.

நாங்கள் தொடர்ச்சியாக கொள்கையுடன் பயணித்ததன் காரணமாக எமது மக்கள் சொல்லொன்னா துயரங்களை அனுபவித்திருக்கின்றார்கள். அந்த துன்பங்களில் இருந்து மீண்டு வருவதற்காகவே நீதிமன்றத்தை நாங்கள் நாடி இருக்கின்றோம். நாங்கள் நீதிமன்ற தீரப்பினை நம்பி இருக்கின்றோம்.அதன் அடிப்படையில் நாங்கள் செயற்படுவோம். என்றார்.

# கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் புதிய செயலக கட்டட அடிக்கல் நடும் நிகழ்வு






**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கிழக்கில் மாகாணத்தில் சமூக சேவை மேற்கொள்வதையே இலக்காகக் கொண்டு 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் புதிய செயலக கட்டடத்தின் அடிக்கல் நடும் நிகழ்வு ஒன்றியத்தின் தவிசாளரும் பொறியியலாளருமான எம்.எம். நஸீர் தலைமையில் (31) இடம்பெற்றது.

பிரதேசத்தின் முன்னணி கல்வி மான்கள், திணைக்களத்தலைவர்கள், ஓய்வுபெற்ற உயர் அதிகாரிகள், உயர் பதவிகளில் உள்ள அரச அதிகாரிகள் மற்றும் தொழிலதிபர் கள் எனச் சமூகப் பொறுப்புமிக்க முக்கிய ஆளுமைகளை அங்கத்தவர் களாகக் கொண்டு கடந்த 30 வருடங்களுக்கு மேல் ஈ.எப்.ஓ நிறுவனம் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது.

“நட்புறவின் மூலம் மனித நேயமிக்க சமத்துவமான சமுதாயத்தை உருவாக்குதல்” எனும் தூரநோக்கினை அடைவதற்காக இப்பிராந்தியத்தில் இருக்கின்ற வறுமை மற்றும் கஷ்டமான நிலையில் வாழும் குடும்பங்கள் மற்றும் தனிநபர்களை ஒன்றியத்தின் உறுப்பினர்கள் (நண்பர்கள்) மூலமாக நேரடியாக அடையாளம் கண்டு, அவர்களின் கல்வி, கலாசாரம், சமூகம் மற்றும் பொருளாதார நிலைமைகளை விருத்தி செய்வதற்குத் தேவையான முடிந்த பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

ஈ.எப்.ஒ உறுப்பினர்கள் மற்றும் கொடையாளர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் தாராளமான உதவிகளைப் பெற்று, அந்தந்த குடும்பங்களின் தேவைகளுக்குப் பொருத்தமான வேலைத்திட்டங்களை காலத்துக் கேற்ற விதத்தில் ஒன்றியம் மிக நேர்த்தியாகச் செயற்படுத்தியும் வருகின்றது.

# பிரதேச கலாசார அதிகாரசபையின் செயலாளராக ஏ.எம். கஸ்புள்ளா தெரிவு

கிண்ணியா பிரதேச கலாசார அதிகார சபைக்கான தேர்வு பிரதேச செயலாளர் எம்.எச். முகம்மது கனி தலைமையில் பிரதேச கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் எழுத்தாளரும் கவிஞருமான ஏ.எம்.கஸ்புள்ளா 2026ஃ2027 ஆம் ஆண்டுக்கான அதிகார சபையின் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் ஆரம்ப காலம் தொட்டு உறுப்பினராகவும், பின்னர் உபதலைவராகவும் அதிகார சபையில் அங்கம் வகித்ததன் மூலம் அனுபவமிக்கவராக காணப்படுகின்றார். இதன் காரணமாக கலாசார அதிகார சபையின் செயற்பாடுகளை முன்னின்று செய்யக்கூடிய ஒருவராகவும் காணப்படுவார்.

மேலும், இவர் தினகரன் ஆலங்கேணி நிருபராகவும், கலை



இலக்கிய மன்றத்தின் செயலாளரா கவும், மத்தியஸ்த சபை உறுப்பின ராகவும், அகில இலங்கை சமாதான நீதவானாகவும் இருந்து வருகிறார்.

கிண்ணியா முன்னோடிகள் கலை இலக்கிய வட்டத்தின் சார்பில், அதன் தலைவர் கலாபூஷணம் பி.ரீ. அஸீஸ் உட்பட உறுப்பினர்கள் இவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸின் நிர்வாக சபைக் கூட்டத்தின் தீர்மானங்கள்



**(எம்.எச்.எம்.சியாஜ்)**

ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸின் நிர்வாக சபைக் கூட்டம் கட்சியின் செயலாளர் இர்பான் முஹிதீன் தலைமையில் (02) கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் நிர்வாக சபையின் பெரும்பான்மையான உறுப்பினர் கள் கலந்துகொண்டு கட்சியின் தற்போதைய செயற்பாடுகள், எதிர்கால திட்டங்கள் மற்றும் நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தனர்.

மேலும், மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் அவற்றுக்கான தீர்வு முன்மொழிவு கள் தொடர்பாகவும் கலந்துரை யாடப்பட்டது. குறிப்பாக கிழக்கு மாகாண மக்களின் தேவைகள், உள்ளூராட்சி மட்டத்தில் காணப்படும் சவால்கள் மற்றும் சமூக ஒற்றுமையை வலுப்படுத்து வதற்கான நடவடிக்கைகள் குறித்து உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

கட்சியின் அமைப்பு நடவடிக்கை களை மேலும் வலுப்படுத்துதல், இளைஞர்கள் மற்றும் பெண்களின் பங்களிப்பை அதிகரித்தல், மற்றும் நாட்டின் அனைத்து சமூகங்களுடனும் இணக்கப்பாட்டு டனான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல் என்பன தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மக்களின் உரிமைகள், சமத்துவம், நல்லாட்சி மற்றும் சமூக நீதியை நிலைநாட்டும் நோக்கில் ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயல்படும் என கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் சீன அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் உலர் உணவுப் பொருட்கள்





**( ஏ.எச்.எம்.ஹாரீஸ், எம்.என். எம்.அப்ராஸ்)**

சீன அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் பெற்றோர் களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு கல்முனை அல்-அஸ்ஹர் வித்தியலயத்தில் பாடசாலை அதிபர் எஸ்.எம்.எஸ். ரிசானா தலைமையில் (04) இடம் பெற்றது.

கல்முனை மாநகரசபை முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளரும்,கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபக தலைவருமான ரஹ்மத் மன்சூரின் அழைப்பின் பேரில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மூன்று மில்லியன் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் மற்றும் உலர் உணவுப் பொருட்களை வழங்கி வைத்தார்.

இதன் போது கௌரவ அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம், அம்பாறை மாவட்ட பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல ஆகியோர் கலந்து கொண்டனர்.

“சீன - இலங்கை சகோதரத்துவ பாசம்” எனும் திட்டத்தின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வு, இரு நாடுகளுக்கிடை யிலான நட்புறவையும் மனிதாபிமான ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்தது.

இதன்போது, மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் கலந்து கொண்ட அதிதிகளுக்கு பாடசாலை சமூகத்தினால் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப் பட்டது.

மேலும் இந்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள்,பெற்றோர்கள் நலன் விரும்பிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அங்குருவாதோட்ட முதியோர் இல்ல தீ விபத்து

# சமூகத்தின் கூட்டு மனச்சாட்சியின் மீது விழுந்த பாரிய அடி



**அஸீஸ் நிஸாருதீன்**

அங்குருவாதொட்ட பகுதியில் “லோகு அய்யா” என்பவரால் நடத்தப்பட்ட “செனெஹே கெதெல்ல” முதியோர் மற்றும் விசேட தேவையுடையோர் காப்பகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் உயிரிழந்து ள்ளனர். மேலும் பலர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். 70 க்கும் அதிகமானவர்கள் இருந்த இந்த காப்பகத்தில் 12 அப்பாவி உயிர்கள் கருகிச் சாம்பலான துயரத்தை வெறும் ‘தற்செயலான விபத்து’ என்று எம்மால் கடந்து செல்ல முடியாது. அது நமது சமூகத்தின் கூட்டு மனச்சாட்சியின் மீது விழுந்த ஒரு பாரிய அடியாகும்.

ஒவ்வொரு முறை ஒரு பேரிடர் நிகழும் போதும் சில நாட்கள் உணர்ச்சிவசப்பட்டுப் பேசிவிட்டு, அடுத்த விபத்து நடக்கும் வரை மௌனமாகிவிடும் ஆபத்தான பழக்கத்திற்கு இலங்கையர்களான நாம் ஆளாகிவிட்டோம். இந்தச் சோகத்தில் இருந்து நமது சமூகம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறையவே இருக்கின்றன. முதியோர் காப்பகங்கள் அனைத்தும் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் வருகின்றன.

ஆனால், பெற்றோரைப் பராமரிப்பதை ஒரு ‘சுமை’யாகப் பார்க்கும் சமூகப் பார்வையைப் பயன்படுத்தி, இன்று முதியோர் மற்றும் விசேட தேவையுடையோர் காப்பகங்கள் என்ற பெயரில் இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட மாஃபியா அமைப்புகள் பெருகிவிட்டன.

ஆரம்பக் கட்டணமாக பல்லாயிரக்கணக்கில் பணத்தைப் பெற்றுக்கொண்டு, அடிப்படைப் பாதுகாப்பு வசதிகள் கூட இல்லாமல், மனிதர்களைச் சங்கிலியால் பிணைத்து வைக்கும் அளவிற்கு இவை மனிதாபிமானமற்ற இடங்களாக மாறியிருப்பது கவலைக்குரியதும், வன்மையாகக் கண்டிக்கத்தக்கதுமாகும். காப்பகங்கள் என்பவை ‘அன்பின் புகலிடங்களாக’ இருக்க வேண்டுமே தவிர, மனிதர்களை சங்கிலியால் கட்டி அடைத்து வைக்கும் ‘சிறைச்சாலைகளாக’ மாறக் கூடாது.



விபத்துக்குள்ளான குறித்த காப்பகம், தேசிய முதியோர் செயலகத்தில் (National Secretariat for Elders) முறையாகப் பதிவு செய்யப்படவில்லை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இலங்கையில் 400-க்கும் மேற்பட்ட முதியோர் இல்லங்கள் இயங்கி வந்தாலும், அவற்றில் சுமார் 136 மாத்திரமே முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது அதிர்ச்சியளிக்கும் உண்மையாகும். மில்லனிய பிரதேச செயலகத்தால் இந்த நிலையத்தின் உரிமையாளருக்குப் பலமுறை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும், அவர் அவற்றை முற்றிலும் அலட்சியம் செய்து, சட்டவிரோதமான முறையில் இந்நிலையத்தை நடத்தி வந்துள்ளார் எனவும் அறியவருகிறது.

இந்த காப்பகத்தின் உரிமையாளர் முகநூல் (Facebook) போன்ற சமூக ஊடகங்களில் ஒரு போலிப் பிம்பத்தை உருவாக்கி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தரப்புகளிடமிருந்து பெருமளவு நிதியுதவிகளைப் பெற்றுள்ளார். அங்கு தங்கியிருந்தோரின் வீடியோக்களையும், புகைப்படங்களையும் மனிதாபிமானமற்ற முறையில் பகிர்ந்து, விளம்பர உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது.

இந்தத் தீ விபத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பாதிக்கப்பட்டோரின் உறவினர்கள், இங்கு தங்கியிருந்தவர்களிடம் ஆரம்பக் கட்டணமாக சுமார் 75,000 ஷரூபாயும், மாதாந்தக் கட்டணமாக 35,000 ஷரூபாயும் அறவிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். எனினும், அதற்கேற்ற எவ்வித அடிப்படை வசதிகளோ அல்லது பாதுகாப்புத் தரநிலைகளோ அங்கு பேணப்படவில்லை என்பது தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

தீ விபத்தின் போது தப்பிச் செல்ல முடியாதவாறு அங்கிருந்த சிலர் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்ததாகப் பிரதேச மக்களும் மீட்புப் பணியாளர்களும் தெரிவிக்கின்றனர்.

மேலும், காப்பகம் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோது, அங்குள்ளவர்களைக் காப்பாற்ற முயற்சிப்பதற்குப் பதிலாக, உரிமையாளர் அந்தச் சம்பவத்தை வீடியோ எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இது அவரது விளம்பர மோகத்தையும் வக்கிரமான மனிதாபிமானமற்ற போக்கையுமே காட்டுகிறது.

எவ்வித தர நிர்ணயமுமின்றி இயங்கிவந்த இந்த இல்லம் குறித்து, சமூக வலைத்தளங்கள் வாயிலாக இவ்வளவு பகிரங்கமாக ஒரு போலிப் பிம்பம் கட்டமைக்கப்பட்டு வந்துள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய காவல்துறையினரோ அல்லது துறைசார்ந்த அரச அதிகாரிகளோ தமது கடமையில் தவறியதன் பின்னணி என்ன என்ற பலமான சந்தேகம் இப்போது எழுகின்றது.

இலாப நோக்கம் கொண்ட இதுபோன்ற போலி காப்பகங்களை ஒழிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

---

## மினா,அரபா அசௌகரியங்கள்

# இனியும் ஏற்படக் கூடாது

## நாடு திரும்பிய ஹாஜிகள் ஆதங்கம்



**எம்.எஸ்.எம்.ஸாகிர்**

இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா சென்ற இலங்கை யாத்திரிகர்கள் அங்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் தொடர்பாக அவர்களது கருத்தைத் தெரிவிக்கும் போது,

பெண் ஹாஜியானி ஒருவர் கருத்து தெரிவிக்கும் போது,

சாப்பாட்டுக்கு நின்ற கியூலயும் வுழு செய்வதற்கு நின்ற கியூலயும் மற்றும் பாத்ரூம்ல நின்ற கியூலயூம் எங்களுடைய அமல் செய்கின்ற நேரங்கள், துஆ கேட்க வேண்டிய நேரங்கள் என நிறைய பாழாகிவிட்டது.

அதுதான் பெரிய பிரச்சினையாகி விட்டது. இதனைப் பற்றி ஹஜ் கொமிட்டி கூடுதலாக யோசிக்க வேண்டும். நாங்கள் மக்காவுக்கு முஸ்லிம்கள் என்னத்துக்காக சென்றிருக்கிறார்களோ அதனை முழுமையாக நிறைவேற்றுவதற்கு ஏற்றதான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஹஜ் என்றால் கஷ்டப்பட வேண்டும் என்பது எங்களுக்கும் தெரியும். ஆனால், நேரங்களை பாழாக்குவது மிக மிக அநியாயம்.

மற்றுமொரு ஹாஜி கருத்து தெரிவிக்கையில்,

இந்த முறை ஹஜ் வந்து எங்களுக்கு மிகவும் வெற்றிகரமாக அமைந்தது. ஆனால், மினா மற்றும் அரபாவில் மட்டும் சில சில அசௌளரியங்களை எங்களுக்கு ஏற்படுத்தியிருந்தது. 3500 பேருக்கு 35 மலசல கூடங்கள் என்பது மிக மிக கஷ்டமாக இருந்தது. இதனால் பெண்களுக்கு மிகவும் அவலமான நிலையாக இந்நிலைப்பாடு இருந்ததை நாங்கள் அவதானித்தோம்.

எதிர்காலத்தில் இக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை எடுத்து ஹஜ் குழு இலங்கை யாத்திரிகர் களுக்கான வசதிகளை கட்டாயம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. 23 லட்சத்துக்கு மேல் நாங்கள் பணத்தை செலவழித்து புனித மக்காவுக்கு செல்கின்றோம். அதில் 750,000 ரூபாவை நாங்கள் ஆறு மாதத்திற்கு முதல் அமானா வங்கிக்கு வைப்புச் செய்கிறோம். எனவே ஹஜ் கொமிட்டி என்ன செய்திருக்க வேண்டும் என்று சொன்னால், ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக செல்கின்ற ஹாஜிகளுக்கு அதற்கான சிறப்பான ஏற்பாடுகளை செய்து கொடுத்திருக்க வேண்டும். எங்களுக்கு பக்கத்தில் இந்தியர்களுடைய கூடாரம் இருந்தது. அவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டி ருந்தது. அது மாதிரி பாகிஸ்தான் கூடாரம் இருந்தது. அவர்களுக்கும் அதற்குரிய சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. அதே மாதிரி துருக்கி கூடாரம் இருந்தது. அவர்களுக்கும் சகல வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், இலங்கை ஹாஜிகளுக்கு மட்டும் தான் நிறைய அசௌகரியங்கள் இருந்ததை நாங்கள் நேரடியாக கண்டோம். உண்மையைச் சொல்லப் போனால் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக இதனைச் சொல்லவில்லை. அங்குள்ள ஹாஜிகள் கஷ்டப்பட்டதை நாங்கள் நேரில் கண்டோம். அதற்காகத்தான் எதிர்காலத்தில் இந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை கட்டாயம் ஹஜ் குழு மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றோம்.

மற்றுமொரு ஹாஜி கருத்தை தெரிவிக்கையில், மக்காவிலும் மதினாவிலும் எடுக்கப்பட்ட தங்கமிட அறைகள் மிகவும் நல்லம். அங்கு கொடுக்கப்பட்ட சாப்பாடு களும் மிகவும் நல்லம்.

ஆனால், மினாவிலும் அரபாவிலும் சாப்பாடும் மலசல கூடமும் சரியான மோசம். மோசம் என்றால் கவனித்தது மிக மிகக்குறைவு. சாப்பாடு நிறைய இருந்தது. ஆனால், சரியாக பகிர்ந்தளிக்கப்பட வில்லை. அடுத்து சாப்பாடு வைத்திருந்த இடங்களும் மிகக் குறைவு. வைத்திருந்த இடங்கள் மிகக் குறைவாகக் காணப்பட்டத னால் தான் அது சரியாக பகிர்ந்தளிக்கப்படவில்லை. எனவே கட்டாயம் மினாவிலும் அரபாவிலும் மலசல கூட வசதிகளை அதிகரிக்க வேண்டும். சாப்பாட்டு இடங்களையும் அதிகரிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

# புதிய காத்தான்குடி மஸ்ஜிதுல் அன்வர் பள்ளிவாயலின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா





(எம்.ஐ.அப்துல் நஸார்)

புதிய காத்தான்குடி கடற்கரையோர வீதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற மஸ்ஜிதுல் அன்வர் பள்ளிவாயலின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் (31) இடம் பெற்றது.

மேற்படி பள்ளிவாயலின் நம்பிக்கை யாளார் சபை சபை தலைவர் ஏ.பீ. எம்.றஜாயி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்ச்சியில் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் இணைந்து நாட்டி வைத்தனர்.

காத்தான்குடி மஃஹதுஸ்ஸுன்னா அந்நபவிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் தலைவார் அஷ்ஷெய்க் எம்.சீ.எம்.றிஸ்வான் (மதனி) சிறப்புரை நிகழ்த்தினார். அதனையடுத்து காத்தான்குடி நகர சபையின் தவிசாளார் எஸ்.எச்.எம்.அஸ்பார் உரை நிகழ்த்தினார்.

இதன்போது பள்ளிவாயலினை நிர்மாணித்து கொடுக்கும் பெஷன் ஹவுஸ் மர்/ஹம் எஸ்.எச்.எம்.நஜீம் அவர்களின் குடும்பத்தினர் சார்பில் முதல் கட்ட கொடுப்பனவு ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா காத்தான்குடி கிளையின் தலைவார் அஷ்ஷெய்க் ஏ.எம்.ஹாரூன் (றஷாதி), செயலாளார் அஷ்ஷெய்க் எம்.ஐ.ஜவாஹிர் (பலாஹி), காத்தான் குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் தலைவார் எம்.சீ.எம்.ஏ.சத்தார், செயலாளார் அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். றமீஸ் ஹாபிழ் (ஜமாலி), பள்ளிவாயலின் முன்னாள் நம்பிக்கையாளார் சபை தலைவார் எம்.எல்.ஆதம்பாவா உட்பட அழைப்பு அதிதிகள், உலமாக்கள், மஸ்ஜிதுல் அன்வர் பள்ளிவாயலின் தற்போதைய மற்றும் முன்னாள் நம்பிக்கையாளார் சபை உறுப்பினர் கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மர்ஹூம் எஸ்.எச்.எம்.நஜீம் அவர்களின் குடும்பத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## உகண பிரதேச செயலகத்தின் கணக்காளராக றிஸ்வி யஹ்சர் கடமையேற்பு



(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

அம்பாறை மாவட்டம் நாவிதன் வெளி பிரதேச செயலகத்தின் கணக்காளராக கடமையாற்றிய மருதமுனையை சேர்ந்த கமறுத்தீன் றிஸ்வி யஹ்சர், நாவிதன்வெளி பிரதேச செயலக கணக்காளர் கடமைக்கு மேலதிகமாக உகண பிரதேச செயலகத்தின் கணக்காள ராகவும் (03) கடமையை பொறுப் பேற்றுக் கொண்டார்.

இவர் கடந்த 2000 ஆம் ஆண்டு இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்து கொண்டதன் பின்னர் மகோயா பிரதேச செயலகம், மகோயா வலயக் கல்வி அலுவலகம், பதியத்தலாவ பிரதேச செயலகம், அக்கரைப்பற்று மாநகர சபை, கல்முனை வலயக் கல்வி அலுவலகம் ஆகிய இடங்களில் சிறந்த சேவைகளை வழங்கி மக்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

தற்போது நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் கணக்காளராக பணியாற்றும் வேளையில், தற்போது இப்பணிக்கு மேலதிகமாக உகன பிரதேச செயலகத்திலும் கணக்காளராக நியமிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் அனுப்பம மங்கள விக்ரமாராச்சி, உகண பிரதேச செயலாளர் திலின விக்கிரமரத்ன, உதவிப் பிரதேச செயலாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் உட்பட நிர்வாக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## ZR cake & bridal academy இன் வருடாந்த பட்டமளிப்பு விழா



(அஷ்ரப் ஏ.சமத்)

ZR cake & bridal academy grand competition and graduation ceremony 03.06.2026 தேசிய நூதனசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஹாஷிம் உமர் பவுண்டேஷனின் ஸ்தாபகர் புரவலர் ஹாஷிம் உமர் அவர்களின் பாரியார் மரியம் ஹாஷிம் உமர் கலந்து சிறப்பித்தார்.

கேக் மேக்கிங், மெகந்தி ஆகிய போட்டிகள் நடைபெற்று வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் ஹாஷிம் உமர் பவுண்டேஷனின் ஸ்தாபகர் புரவலர் ஹாஷிம் உமர் அவர்களின் பாரியார் மரியம் ஹாஷிம் உமர் வழங்கி வைத்தார்.

## சாய்ந்தமருது சமாதான நீதிவான் அமைப்பின் ரீ சேர்ட் அறிமுக நிகழ்வு






(அஷ்ரப் .ஏ சமத்)

சாய்ந்தமருது சமாதான நீதவான்கள் மற்றும் சமூக மேம்பாட்டு அமைப்பின் சமாதான நீதவான் முத்திரை பொறிக்கப்பட்ட ரீ-சேர்ட் அறிமுகப்படுத்தும் வைபவம் (31) சாய்ந்தமருது ஜி.எம். எம். எஸ் பாடசாலை கேட்போர் கூடத்தில் இவ் அமைப்பின் தலைவர் பொறியியலாளர் ஏ.எம். ஜப்பார் தலைமையில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பொறியியலாளர் எம்.எம். நசீர் சமாதான நீதாவன் களுக்குரிய ரீ.சேர்ட்டுக்களை அனுசரணை வழங்கி அதனை அனிவித்தார். அத்துடன் சாய்ந்த மருது சமாதான நீதவான்கள் அடங்கிய விபரக் கொத்து அடங்கிய பதிவேடும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் சமாதான நீதவான் அமைப்பின் செயலாளர் எம்.எம். உதுமாலெப்பை மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் உலக சுற்றாடல் தின நிகழ்வு






(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் "கால-நிலை மாற்றத்தின் தாக்கங்களை குறைப்பதற்காக செயற்படுவோம்" எனும் தொனிப்பொருளில் (05) பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டது.

பாடசாலையின் அதிபர் எம். ஐ. ஜாபீரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் மாணவர்கள் பல்வேறு விழிப்புணர்வுப் பதாதைகளை ஏந்தியபடி பாடசாலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஊர்வலமாகச் சென்றனர்.

இந்த ஊர்வலம் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்ததுடன், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர் வையும் ஏற்படுத்தியது.

மேலும், சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைத்தல், மரங்களைப் பாதுகாத்தல், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தல் மற்றும் தூய்மையான சூழலை உருவாக்குதல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்வின் மூலம் மாணவர்களி டையே சுற்றுச்சூழல் மீதான அக்கறை, பொறுப்புணர்வு மற்றும் சமூகப் பங்களிப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்பு உருவாக்கப்பட்டதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

அருவிக்கரை



நாச்சியாரீவு பர்வீன்

# மக்குகள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறார்கள்

சூமக்கு"என்ற"அபி- நீண்ட நாட்களின் பின்னர் என்னை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்ட அற்புதமான காவியம்.

281+ பக்கங்களை இரண்டு இரவுகளுக்குள் கவனச் சிதறலின்றி வாசித்து....இல்லை இல்லை கூடவே பயணித்து முடித்திருக்கிறேன். அல்ஹம்துலில்லாஹ்.

எழுத்தாளர் Fasmil A Gafoor பஸ்மில் ஏ கபூரின் எழுத்துக்களுடன் பயணித்த அனுபவம் ஆத்மார்த்த மானது.

பழகியதில்லை, பேசியதில்லை, அறிமுகமும் இல்லை. ஆனாலும், அவருடைய எழுத்துக்கள் அவர் மீதான பிணைப்பை உருவாக்கி விடுகிறது.

வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும்.

ஆயிஷா நடராசன் எழுதிய “ஆயிஷா” ஆயிஷாவையும், அவளது கனவுகளையும் படம்பிடித்துக் காட்டியதை விடவும், பஸ்மில் ஏ கபூரின் மக்கு என்ற அபியோ அபியோடும் அவனது குடும்பத்தோடும் மாத்திரம் சுருங்கி விடாது அதில் உலாவரும் ஒவ்வொரு பாத்திரங்களோடும் நம்மை முழுமையாக இரண்டறக் கலக்கும் மாயத்தைச் செய்து விடுகிறது.

அபி, சனா, மாயா, ராபி..... எனும் மாணவர்கள், அவர்களின் பின்னணி, அவர்களின் குணாம்சங்கள், சமீறா டீச்சர், மல்லிகா டீச்சர், ராணி டீச்சர், இஜாஸ் சேர், டேவிட் சேர், ரமீஸ் சேர்.... என்கின்ற ஆசிரியர்கள், அவர்களின் தொழில்சார் பண்புகள், நடத்தைகள்,

சபினா, காசிம், அனிபா காக்கா.... எனும் குடும்பப் பாத்திரங்கள்.... இப்படி கதை நெடுக வாழ்ந்துவிட்டு போகும் ஒவ்வொரு கதாபாத்திரமும் நிஜங்களாகவே பயணிக்கும் அதிசயத்தை இந்த கதைக்குள்ளே தான் காணக் கிடைத்தது.

ஒரு சாண்டில்யனிடம், சுஜாதாவிடம், கல்கியிடம், ராஜேஷ் குமாரிடம்...... இருக்கும் கதைசொல்லிகள் போல நம்மை விரல் நுனி பிடித்து அழைத்துச் செல்லும் அற்புதத்தை நிகழ்த்திவிடுகிறார் எழுத்தாளர்.

மக்குகள் பிறப்பதில்லை. உருவாக்கப் படுகிறார்கள் எனும் தத்துவார்த்த கருத்தில் தொடங்கி

“ஆசிரியர்கள் என்பவர்கள் வாழ்வளிப்போரேயன்றி, வாழ்வை அளிப்பவர்கள் அல்ல”

“ஏளனங்கள் நிறைந்த வகுப்பறை களில் கோமாளிகளே ஆசிரியர்களாக வேடமிட்டிருப்பர்.”

சில ஆசிரியர்களின் அன்பைப் பெற நாம் கெட்டிக்காரர்களாகத்தான் இருக்க வேண்டுமா?


“தொலைத்து விடாதீர்கள் – பிள்ளைகள் பத்திரம்” வரையிலான கருத்துக்கள் இதயத்தை சாறு பிழிந்து எடுக்கத்தக்கவை.

**நஸீர் ஹாரிஸ் நத்வி**

ஒவ்வொரு கல்வியியலாளரும், அதிபர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும் கட்டாயம் வாசிக்க வேண்டிய அற்புத நூல் இது.

நாமும் வகுப்பிலும், வீடுகளிலும் எத்தனையோ அபிகளைத் தொலைத்து விடுகிறோம்.

மகனும் மகளும் என்னை அபீ – (என்ட வாப்பா எனும் கருத்துடைய அரபுச் சொல்) என்றே அழைக்கின்றனர். இந்தப் புத்தகத்தின் அட்டையைப் பார்த்ததன்




பின்னர் எங்க மகன் “மக்கு என்ற அபி” என்றே நேற்றிலிருந்து கூப்பிடுகிறான்.

மல்லிகா டீச்சரின் மக்காக அல்லாது, ராணி டீச்சரின் மக்காக இருந்து விட்டுப் போவது எவ்வளவு சுகம்.

இயலுமானால், எழுத்தாளரை அறிந்தவர்கள் எனது அன்பையும் நன்றியையும் அவருக்கு சேர்த்து விடுங்கள். அவருக்காக மனமுருகி பிரார்த்தனை செய்ததாகவும் சொல்லிவிடுங்கள்.

தாங்கிக் கொள்ள முடியாத தலைவலி ஏற்பட்டிருந்த நிலையில் தலைக்கனத்தை துடைத்தெறிய வாய்ப்பளிக்கும் இந்தப் புத்தகத்தை வாசித்தமை அல்லாஹ்வின் பேரருள் என்பேன்.

மார்க்கம், சமூகம் மற்றும் கல்விசார் கருத்தியல்கள் என எல்லாவற்றையும் மனதளவில் உள்வாங்கி எந்தவொரு அறமும், பொருளும் மீறப்படாத வகையில் தனது கருத்துக்களை முன்வைக்க எடுத்திருக்கும் முயற்சி மெச்சத்தக்கதென்பேன்.

திரும்பிப் பார்க்கிறேன். அபியின் இடத்தில் நான் நிற்கிறேன்.

அவனின் அத்தனை குணாம்சங்களும் கண்முன்னே சுழல்கின்றன.

மீளவும் சொல்கிறேன்.

தவற விடாமல் மக்கு என்ற அபியைப் படித்து விடுங்கள்.

அவன் ஆயிரமாயிரம் கதைகள் பேசுவதை காண்பீர்கள்.

நான் எத்தகைய ஆசிரியர் என்பதை எடை போட்டுக் கொள்ள வாய்ப்பொன்று கிட்டும்.

கறுப்பு, வறுமை, போதை, புகழ், ஏளனம், நட்பு, நேசம், பாசம், அன்பு, வெறுப்பு, அதிகாரம், கௌரவம்..... என்கின்ற பல்வேறு தளங்களிலும் படர்கிறது கதைக் கொடி.

## அன்பான வாசகர்களே!

**அறிவுக்கரை பகுதிக்கு உங்களது இலக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் என உங்களது ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள் தரம் கண்டு பிரசுரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்க கீழே உள்ள whatsapp இலக்கத்தை பயன்படுத்தவும்.**

0767877876

## காயம் என்னும் நடனம்



குருதி வழியாத வடுக்களால்
அலங்கரிக்கப்பட்டிருக்கிறது
என் அரங்கம்.

இங்கு
அடிவயிற்றின் ரகசியக்
கீறல்களிலிருந்துதான்
இசை துவங்குகிறது.

காலத்தின் சாட்டையடிகள்
முதுகில் விழும்போதெல்லாம்
வலி,
ஒரு தாளலயமாக மாறிவிடுகிறது.

நான் சுழன்றாடுகிறேன்...
என் துயரங்களின் சுருதிக்கு ஏற்ப
நீங்கள் பார்ப்பது
நளின அசைவுகளை
மேலும்
ஒவ்வொரு வளைவிலும்
முறிந்து விழும் எலும்புகளின்
மரண ஓலத்தை.

புன்னகையால் மூடிவைத்த
ரணங்களின் மீதுதான்
இந்த உலகம் தன் சிம்மாசனத்தைப்
வரைகிறது.

என் கால்களில் கட்டப்பட்டிருப்பது
உடைந்த கனவுகளின்
கூர்மையான சில்லுகள்.

ஆடிமுடித்த பின்
நிரம்பும் கைதட்டல்களில்
அடங்கியிருக்கிறது ஒரு பெருமூச்சு.

மேடை விளக்குகள் அணையும்போது
என் காயம்
மறுபடி ஆடுவதற்கான
தனிமையைத் தேடி அலைகிறது.

**ஏ.நஸ்புள்ளாஹ்**



## கடலின் பயணம் ஹஜ் ... !

நாம் பார்க்க
நதிகள் நடந்து போய்
கடலைச் சேரும் !
ஆனால்... ஒரு அதிசயம்
கடலே திரண்டு போய்
புனித கஅபாவைக்
காணப்போகிறதே...
அதுதான் ஹஜ்..!

இன்னும் சிறப்பாகச்
சொல்வதானால்
தாய் மடி தேடிச் செல்லும்
தொப்புள் கொடிகளின்
பயணமே.. ஹஜ்.. !

மெய்யாகவே
சமத்துவபுர மென்றால்
மாநகர் மக்காதான் !
அங்கே தான்
நிறம் கடந்து இனம் கடந்து
மொழி கடந்து
இஹ்ராம் உடையணிந்து
வெள்ளைப் பறவைகளாய்
மக்கள் கூடுகின்றார்கள் !
அங்கே கூடிடும்
அத்தனை பேர் இதழ்களும்
லெப்பைக் அல்லாஹு"ம்ம
லெப்பைக் என்று முழங்கும்
அழகே.. அழகு !
அங்கே.. ஸலாமும்
ஸலவாத்தும் ததும்பி வழியும்

சகோதரத்துவம்
கைகுலுக்கும் !
சமத்துவம்
புன்னகைக்கும் !

லாயிலாஹ இல்லல்லாஹு"
முஹம்மது ரசூலல்லாஹ்
இந்த திருக்கலிமாவை
உலகிற்கு உரத்துச் சொன்ன
இறை இல்லம் கஅபா !

மாநகர் மக்கா
உலக முஸ்லீம்களின்
காதல் தேசம்
அதைக் காணத்துடிக்கும்
கண்கள் தான்

எத்தனை யெத்தனை !
கால்வாயில்
தண்ணீர் வரும்... !
கல்வாயில்
தண்ணீர் வருமா ..?
வரும்.. வந்தது
அது தான் ஜம்ஜம் நீரூற்றாய்
ஐயாயிரம் ஆண்டுகளாக
வந்து கொண்டிருக்கிறது !
இது வல்ல அல்லாஹ்வின்
அருட்கொடையின்
அத்தாட்சியல்லவா !

பலர் பேசக் கேட்பது
மாநாடு !
ஆனால்..அன்று அரபாஃத்திடலில்

நம் சங்கை நபிமணி (ஸல்) பேச
ஒரு லட்சத்திற்கும் மேலான
மக்கள் திரண்டிருந்து
கேட்டார்களே..!
அது ஒரு சம்பவம் அல்ல
சரித்திரம் எனலாம்

இவைகளோடு
ஹஜ்ஜில்
நாம் காண வேண்டிய
இன்னொரு நகரமும் இருக்கிறது
அது எது தெரியுமா?
நம் பெருமானார் (ஸல்)
அவர்களுக்கு வாய்த்த
இன்னொரு தாய்மடி !

நபிகளாரின் வாழ்வியலின்
இரண்டாம் பாகத்தை
இனிப்பாக எழுதிய
எழில் நகரம் ! – இப்போது
தெரிகிறதா ?
அது தான் மாநகர் மதீனா !
அன்ஸாரிகளின்
அன்பு வெள்ளம் பாய்ந்த
செல்வச் சீமை !

ஆன்மீகத் தலைவராய்
பார்த்த அண்ணலாரை
அரசியல் வேந்தராய்
மக்களாட்சித் தலைவராக
அரியணையில் ஏற்றி
பூரித்து பார்த்த நகர் மதீனா..!

இப்படி
புனித மிக்க தலங்களைப்
பார்த்து வருவதே ஹஜ் !
இந்த ஹஜ்ஜின் பாக்கியம்
நமக்கும் கிடைக்க...
துஆச் செய்வோம் !

உலக முஸ்லீம்கள்
அனைவருக்கும்
தியாகப் பெருநாள்
வாழ்த்துக்கள்... !

**மு ஹிதாயத்துல்லா**
**இளையான்குடி**

# ஆயிரம் கிராமங்கள் ஆயிரம் கருத்திட்டங்கள்" ஓட்டமாவடியில் ஆரம்பம்





**(எஸ்.எம்.எம்.முர்ஷித்)**

வளமான நாடு - அழகான வாழ்க்கை என்ற தொனிப் பொருளில் முன்னெடுக்கப்படும் பிரஜாசக்தியின் "ஆயிரம் கிராமங்கள் - ஆயிரம் கருத்திட்டங்கள்" திட்டத்தின் கீழ், கோறளைப்பற்று மேற்கு - ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி 01ம் வட்டாரம் வடக்கு பி/2 பிரிவில் ஆழ் கடல் மீன்பிடி படகுககளை பைபர் மூலமாக திருத்தும் பணிகளுக்கான ஆரம்ப நிகழ்வு (02) இடம் பெற்றது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி வடக்கு பி/2 பிரஜாசக்தி தவிசாளர் எம்.பி. அஹமட் இர்ஷாட் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ. தாஹிர் கலந்து கொண்டதுடன் அதிதிகளாக பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ. றியாஸ், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.ஏ.ஹாதி, கிராம சேவை உத்தியோகத்தர் பஸ்மி, பிரதேச சபை உறுப்பினர் லத்தீப் ஹாபிஸ், ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவுக்கான கிளீன் ஸ்ரீலங்கா அமைப்பாளர் மௌலவி. எம்.புக்கான், தேசிய மக்கள் சக்தியின் பிரதேச ஒருங்கிணைப்பாளர் சேகு இஸ்மாயில் பாரூக், பிரஜா சக்தி தவிசாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், படகு திருத்துனர் சங்க உறுப்பினர்கள், பிரதேசவாசிகள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

# உக்குவளையில் வெசாக் வாரத்தை முன்னிட்டு சர்வமத நிகழ்வு





**(உக்குவளை நிருபர்)**

வெசாக் வாரத்தை முன்னிட்டு உக்குவளை பிரதேச சபையின் தலைவர் நிமல் கருனாரத்னவின் ஆலோசனையில் சர்வமத நிகழ்வொன்று இச்சபை அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பௌத்த மதம் சார்பாக அநுராதபுரம் பௌத்த பிக்குகள் கலாசாலை விரிவுரையாளர் விமலானந்த தேரர், முஸ்லிம் மதம் சார்பாக உக்குவளை மௌலவி பிரதவ்ஸ் , இந்து மதம் சார்பாக உக்குவளை சுப்பிரமணிய கோயில் பூசக குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டு தத்தம் மத நல்லுபதேசங்களை நடத்தினர். இந்நிகழ்வின் இறுதியில் பிரதேசத்திலிருந்து அழைக்கப்பட்ட வறுமைக்குற்பட்ட ஐம்பது குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் இச்சபையின் உதவித் தலைவர் எம்.ராபி ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

# சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தராக பதவியுயர்வு பெற்றார் ஏ.எல். தௌபீக்



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் "சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தராக" (MN - 7- SUPRA GRADE) 2023.01.01 முதல் அமுலுக்கு வரும் வகையில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கான பதவியுயர்வு நியமனக் கடிதம் 2026.06.01 ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்ன சேகரவினால் வழங்கி வைக்கப்பட்டது.

இப்பதவியுயர்வானது கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் கடமையாற்றும் சுமார் 45 கலாசார உத்தியோகத்தர்களில் விண்ணப்பிக்கத் தகுதியான கலாசார உத்தியோகத்தர்கள் தரம் ஐ ஐ சேர்ந்தவர்கள் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு அமைய விண்ணப்பித்து அதற்கமைவாக நடாத்தப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் மாகாணத்தில் இருவர் மாத்திரமே நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதில் ஒருவர்தான் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.எல்.தௌபீக். மற்றையவர் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஐ.ஆர்.ஜீ. நிமல்சிறி பண்டார என்பது குறிப்பிடத்தக்கது.

பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பட்டதாரியான இவர், அரச சேவையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக, ஆசிரியராக மற்றும் அதிபராக எட்டு வருடங்கள் சேவையாற்றிய நிலையில், போட்டிப் பரீட்சை மூலம் கலாசார உத்தியோகத்தராக நியமனம் பெற்று 2000 ஆம் ஆண்டு முதல் அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம், அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலகங்களில் கடமையாற்றிய நிலையில், 2009 இல் இருந்து அம்பாறை மாவட்ட கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராக நியமனம் பெற்று அம்பாறை மாவட்ட செயலகம் மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட காரியாலயங்களில் 17 வருடங்கள் மாவட்ட மட்ட கலாசார வேலைத் திட்டங்களை எல்லோரது மனங்களையும் கவரும் வண்ணம் இன, மத வேறுபாடின்றி மேற்கொண்டு வந்த நிலையில், அவருக்கான இப்பதவியுயர்வு கிடைத்திருப்பது மாகாண மற்றும் மாவட்ட மூவின கலைஞர்களது மனங்களிலும் மட்டில்லா மகிழ்வைத் தருகின்றது.

# புத்தளம் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி பட்டறை






**(எம்.எச்.எம். சியாஜ்)**

சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் இலங்கை பத்திரிகைப் பேரவையினால் புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்களுக்கான ஒருநாள் பயிற்சி பட்டறை ஒன்று புத்தளம் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் புத்தளம் மாவட்ட செயலாளர் வை. இந்திக மஞ்சுள சில்வாவின் தலைமையில் (03) நடைபெற்றது.

இன்றைய கால கட்டத்தில் ஊடகவியலாளர்கள் சட்ட ரீதியாக எதிர் நோக்கும் பிரச்சனைகள் மற்றும் அதற்கான தீர்வு என்பன தொடர்பாகவும் பத்திரிகை பேரவை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மற்றும் பிரதேச ஊடகவியலாளர்களின் கௌரவம் அதனை எவ்வாறு பாதுகாப்பது ஊடகவியலின் நவீன தொழில்நுட்பங்களுடன் எவ்வாறு முன்னேற்ற பாதையில் தமது ஊடக சேவைகளை பொது மக்களுக்கு வழங்குவது என்பது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இப் பயிற்சி பட்டறையில் இலங்கை பத்திரிகை பேரவையின் தலைவர் பீ.என்.ஆர். விஜயபண்டார, முன்னாள் தகவல் அறியும் உரிமை ஆணைக் குழுவின் அங்கத்தவரும் சட்டத் தரணியுமான ஜகத் லியாணாராச்சி, சிரேஷ்ட ஊடகவியலாளர் சிசிர யாப்பா, இலங்கை பத்திரிகை பரவையின் உதவி ஆணையாளர் சுரோஷன இரங்க, இலங்கை பத்திரிகை பேரவையின் ஆணையாளர் நிரோஷன தம்பவிட்ட ஆகியோருடன் புத்தளம் மாவட்ட செயலகத்தின் ஊடக இணைப்பாளர் இந்துனி மற்றும் புத்தளம் மாவட்ட ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

# பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறித்த அறிவித்தல்

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் 73 பிரதான நீர்த்தேக்கங்களில், அவற்றின் மொத்தக் கொள்ளளவிலிருந்து 63 சதவீதமான நீர் தற்போது சேமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, எதிர்வரும் சிறுபோக பயிர்ச்செய்கைக்குத் தேவையான நீரை முறையாக வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, பிரதான நீர்த்தேக்கங்களின் தற்போதைய நீர் கொள்ளளவு மாவட்ட ரீதியாக பின்வருமாறு:

* அம்பாறை - 41%
* அனுராதபுரம் - 81%
* பதுளை - 74%
* மாத்தளை - 49%
* காலி - 72%
* கண்டி - 93%
* குருணாகல் - 86%
* மொனராகலை - 76%
* பொலன்னறுவை - 71%
* புத்தளம் - 93%
* திருகோணமலை - 68%
* மன்னார் - 76%

இருப்பினும், வரும் நாட்களில் மழைவீழ்ச்சி குறையக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், நீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# அனுராதபுரம் சாஹிராவில் கிரிக்கெட் சம்பியனான பழைய மாணவர் அணி




**( எம்.ரீ.ஆரிப்)**

அனுராதபுரம் சாஹிரா கல்லூரி பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் 2001 பழைய மாணவர் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது. கல்லூரி மைதானத்தில் (31) நடைபெற்ற இறுதி நாள் போட்டியில் 2001 பழைய மாணவர் அணி 1998 அணியை வீழ்த்தியது. இதன் போது பாடசாலை அதிபர் ஜே.ஏ.அசாத் மொஹமட் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும் 102

# உறவின் வலிமை...?



கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளை, ஆசிரியர் – மாணவர், நண்பர்கள், உறவினர்கள் என எந்த உறவாக இருந்தாலும், அந்த உறவில் ஒரு வலிமை இருக்க வேண்டும். வலிமை இல்லாத உறவுகள் வெளிப்படையாக நன்றாகத் தோன்றினாலும், உள்ளுக்குள் வெறுமையாக இருக்கக்கூடும்.
உறவு என்பது வெறுமனே இருவர் இணைந்திருப்பதல்ல. அது இரண்டு மனங்கள் பகிர்ந்து கொள்ளும் நம்பிக்கை, அன்பு, அக்கறை மற்றும் பொறுப்புணர்வின் பிணைப்பு.
அந்தப் பிணைப்பை உயிர்ப்புடன் வைத்திருப்பதே உறவின் வலிமை.
ஆனால் “உறவின் வலிமை” என்றால் என்ன?
உறவின் வலிமை என்பது... எப்போதும் ஒன்றாக இருப்பது அல்லது வெளிப்படையான நெருக்கம் என்று பலரும் நினைக்கலாம். உண்மையில், உறவின் வலிமை என்பது அதைவிட ஆழமானது.
உறவின் வலிமை என்பது வெளிப் படையாகத் தெரியும் நெருக்கத்தை மட்டுமல்ல் அந்த உறவு சோதனைகள், பின்னடைவுகள், கருத்து வேறுபாடுகள், கால மாற்றங்கள், தூரங்கள் மற்றும் கஷ்டங்களைத் தாங்கி நிலைத்து நிற்கும் திறனை குறிக்கிறது.
இதை இன்னும் எளிமையாகச் சொல்வதானால்:
சூழ்நிலைகள் மாறினாலும் சிதையாமல் நீடிக்கும் ஆற்றலே உறவின் வலிமை.

**இந்த வலிமையின் அடித்தளமாக இருப்பவை:**

* நம்பிக்கை குலையாதிருத்தல்
* ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் மனப்பக்குவம்
* குறைகளைத் தாங்கும் பொறுமை
* தேவையான நேரத்தில் துணையாக நிற்றல்
* சுயநலத்தைத் தாண்டிய அக்கறை
* கருத்து வேறுபாடுகள் வந்தாலும் உறவைப் பாதுகாக்கும் விருப்பம்

எனவே உறவின் வலிமை என்பது, ‘சிரிப்பில் இணைவது அல்ல் கண்ணீரிலும் பிரியாமல் நிற்பது.’
உறவின் வலிமை என்பது, ‘அருகில் இருக்கும் போது தெரியும் நெருக்கம் அல்ல.
தூரத்தில் இருந்தாலும் குறையாத பிணைப்பு.’
இன்னும் ஆழமாகப் பார்த்தால், உறவின் வலிமை என்பது “நான் உன்னிடம் என்ன பெறுகிறேன்..” என்பதில் இல்லை “எது நடந்தாலும் இந்த உறவை நான் எவ்வளவு மதிக்கிறேன்” என்பதில்தான் இருக்கிறது.
வலிமையற்ற உறவுகளில் இதய இணைப்புகள் நிலைத்திருக்க சிரமமாக இருக்கும். ஆனால் எல்லா பலவீனமான உறவுகளும் பொய்யானவை அல்ல.
சில நேரங்களில் அன்பு இருந்தும், புரிதலின்மை, மனக்காயங்கள் அல்லது வாழ்க்கைச் சூழ்நிலைகள் காரணமாக உறவுகள் பலவீனமடையலாம். அந்த உறவுகளை மீண்டும் வலுப்படுத்துவது அன்பும், உரையாடலும், புரிதலும்தான்.
உறவு என்பது இருவர் அருகில் இருப்பதால் உருவாகும் பிணைப்பு அல்ல. ஒருவரின் வாழ்க்கையில் மற்றொருவர் எந்த அளவுக்கு அர்த்தமுள்ளவராக இருக்கிறார் என்பதன் வெளிப்பாடு. அந்த அர்த்தம் காலத்தையும், தூரத்தையும், சோதனைகளையும் கடந்து நிலைத்திருந்தால், அதுவே உறவின் உண்மையான வலிமை.
உங்கள் உறவுகளின் வலிமையை நீங்கள் எதன் மூலம் அளவிடுகிறீர்கள்? சிந்தித்துப் பாருங்கள்...



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---

## மங்கையொளி

# அப்ளிக் வேர்க்

**பயாஸா பாஸில்**

துணியின் மேல் துணியை வைத்து வடிவம் தைக்கும் கலை அப்ளிக் வேலை (பின்னல் ஒட்டு வேலைப்பாடு) எனப்படும். லத்தீன் “Applicare” என்ற சொல்லில் இருந்து வந்த இந்த வார்த்தைக்கு “பொருத்துதல்” என்று பொருள். அப்ளிக் என்பது ஒரு துணியின் மேல் இன்னொரு துணியை வடிவமாக ஒட்டி, ஓரத்தில் எம்பிராய்டரி போட்டு அழகுபடுத்துவதாகும். இது வெறும் அலங்காரம் மட்டுமல்ல, கலை, கதை, கலாசாரத்தின் கூட்டு ஆகும்.
அப்ளிக் கலைக்கு 4000 ஆண்டுகள் பழமையான வரலாறு உண்டு. கி.மு 980 காலத்து எகிப்திய பாரோ மன்னன் தூத்மோஸ் ஐஏ-ன் கூடாரத்தில் தோல் அப்ளிக் வேலை கண்டுபிடிக்கப்பட்டது.
மங்கோலியர்கள், சைத்தியர்கள் தங்கள் கூடாரம், ஆடை, குதிரை சேணத்தை வண்ண தோல் துண்டுகளை வெட்டி ஒட்டி அலங்கரித்தனர். இது குளிரிலிருந்து காக்கவும், அடையாளம் காட்டவும் பயன்பட்டது.
இந்தியாவில் அப்ளிக் “பிப்லி” என்ற பெயரில் ஒடிசா மாநிலத்தில் பிரபலம். பூரி ஜெகன்நாதர் கோவில் தேர்த் திருவிழாவுக்கு வண்ணத் துணியில் யானை, மயில், மீன் வடிவம் வெட்டி, கருப்பு துணியின் மேல் தைத்து பிரம்மாண்ட கூடாரம், குடை செய்கிறார்கள்.
ராஜஸ்தானில் “கோத்ரி” என்று அழைக்கப்படும் இது, கண்ணாடி துண்டுகள், மணி சேர்த்த ஆடைகளின் வடிவமைப்பில் ஜொலிக்கும். குஜராத் கட்ச் என்ற பகுதியில் “கதி அப்ளிக்” மிக பிரசித்தம். கருப்பு பேஸ் துணியில் சிவப்பு, மஞ்சள், பச்சை துணியை வெட்டி ஒட்டி, சங்கிலி தையல் போட்டு வடிவம் போடப்பட்டு அப்ளிக் உயிர் பெறுகிறது.
ஆப்பிரிக்காவில் பெனின் நாட்டின் “போன்னு” மக்கள் அப்ளிக்கை வரலாறு சொல்லும் கேன்வாஸாக பயன்படுத்தினர்.
மன்னரின் வெற்றி, போர் கதையை துணியில் வெட்டி ஒட்டி சுவர் திரை செய்தார்கள்.





இடைக்கால ஐரோப்பாவில் தேவாலயங்களில் பயன்படும் ஆடை, பீடத்துணி, கொடிகளில் தங்க நூல், வெல்வெட் துணியால் அப்ளிக் செய்தார்கள்.
இயேசுவின் கதை, புனிதர்களின் உருவத்தை துணியில் வெட்டி ஒட்டி மத உணர்வை பரப்பினார்கள்.
அப்போது துணி விலை உயர்ந்ததால், சின்ன சின்ன துண்டுகளை சிக்கனமாக பயன்படுத்த இந்த அப்ளிக் முறை உதவியது.
கி.பி 1893-இல் அமெரிக்கர்கள் ஹவாய் அரசைக் கைப்பற்றினர். அரசி லிலியுஓகலானியை அவரது அரண்மனையின் மேலறையில் எட்டு மாதங்கள் சிறைவைக்கப்பட்டார்.
இவருக்கு பேசவும், எழுதவும் தடை விதிக்கப்பட்டது.



பாரோ மன்னன் தூத்மோஸ் ஐஏ இன் கூடார துண்டு

சிறையில் இருந்த அரசி, தம் மக்களுக்குச் செய்தி அனுப்ப அப்ளிக் முறையைப் பயன்படுத்தினார்.
வெண்மை நிறப் பின்னணித் துணியின் மேல், ஒரே நிறத் துணியை மடித்து எட்டிதழ் மலராக வெட்டி ஒட்டித் தைத்தார். இது ஹவாய் பாணி அப்ளிக் ஆகும்
எட்டிதழ் மலர் – ஹவாயில் உள்ள எட்டுப் பெரிய தீவுகளைக் குறிக்கும். “நம் நாடு ஒன்றுபட்டு உள்ளது” என்ற செய்தி.
கொடி நிறத் துணி – ஹவாய் நாட்டுக் கொடியின் நிறத்தில் துணியைத் தேர்ந்தெடுத்து தைத்தார். “நம் விடுதலை உணர்வு என்றும் அழியாது” என்ற குறிப்பு.
அப்ளிக் கலையூடாக அரசி தம் நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஊட்டினார்.
அந்தப் போர்வைக்கு “உகிலானி போர்வை” எனப் பெயரிட்டார். அது இன்றும் ஹொனலுலுவில் உள்ள பிஷப் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது.
19-ம் நூற்றாண்டில் சிக்சாக் தையல் இயந்திரம் வந்த பின் அப்ளிக் வேகமானது. கை தையல் போட்ட ஓரத்தை இயந்திரம் நேர்த்தியாக தைத்து கொடுத்தது. 20-ம் நூற்றாண்டில் “ரா எட்ஜ் அப்ளிக்” என்ற புது ஸ்டைல் வந்தது. ஓரத்தை மடிக்காமல் அப்படியே தைத்து பிரிந்து போக விட்டு பழமை தோற்றம் தந்தார்கள்.
இன்று அப்ளிக் உலகம் முழுக்க



இடைக்கால ஐரோப்பா தேவாலய அப்ளிக் பெனர்

பரவியுள்ளது. ஃபேஷன் டிசைனில் டீ-ஷர்ட், ஜீன்ஸ், காலணியில் லோகோ, பூ, கார்டூன் வடிவம் அப்ளிக் செய்யப்படுகிறது. நைக், அடிடாஸ் போன்ற பிராண்டுகள் இதை பெரிய அளவில் பயன்படுத்துகின்றன.



குழந்தைகள் குவில்ட், பேக்கில் 3னு அப்ளிக், ஃபீல்ட் துணி அப்ளிக் ட்ரெண்டாக உள்ளது.
லேசர் கட்டிங், கம்ப்யூட்டர் எம்பிராய்டரி வந்த பின் நுணுக்கமான வடிவம் சில நொடியில் வெட்டி தைக்க முடிகிறது.
ஆனால் கைவினை அப்ளிக்கிற்கு இன்னும் தனி மதிப்பு உண்டு.
“அப்சைக்கிளிங்” மற்றும் “சஸ்டைனபிள் ஃபேஷன்” காலத்தில், பழைய துணியை வெட்டி புது டிசைன் உருவாக்கும் அப்ளிக் மீண்டும் முக்கியத்துவம் பெறுகிறது.
வரலாறு முழுக்க அப்ளிக் ஒரு செய்தியை சொல்கிறது: சின்ன துணிகளும் வீணில்லை, அதை சரியான இடத்தில் பொருத்தினால் அது அழகாகும்.
எகிப்திய கூடாரம் முதல் இன்றைய ரேம்ப் வாக் வரை, அப்ளிக் மனிதனின் படைப்பாற்றலுக்கு சாட்சியாக நிற்கிறது.
இது கடந்த காலத்தின் கலை மட்டுமல்ல, எதிர்காலத்தின் சூழல் சார்ந்த தீர்வும் கூட.

**பா.ஸானா.பஸ்லி**
Pattern Maker &
Fashion Illustrator
Founder Of Art Gallery
Academy



# உதய பூங்கா

**பாரா தாஹிர்**
**சிரேஷ்ட ஊடகவியலாளர்**

## எனது இலட்சியம்

நான் அஹமட் ரஸா
நான் மூன்றாம் ஆண்டு படிக்கின்றேன்.
எனது எதிர்கால இலட்சியம் பொலிஸ் தொழிலில் ஈடுபடுவதாகும். நான் அத்தொழிலை விரும்புவதற்கு காரணம் எமது நாட்டை பாதுகாப்பதற்காகவே.
நேர்மையோடும் பாராபட்சமின்றி அழகாய் செய்வேன்.
நாட்டில் நடக்கும் அநீதியை ஒழிப்பேன் போதையை இல்லாமலாக்க என்னாலான சேவையை செய்வேன்.
அதனால்தான் நான் இந்த தொழிலை விரும்பினேன்

A.S.அஹமட் ரஸா
தரம் ___3/A
மட்/மம/பஷீர் சேகுதாவுத் வித்தியாலயம்,
ஏறாவூர்.

## சிறுவர் சித்திரங்கள்




M.I.Amrash
Al Hamza International School,
Mawanella.
Theme - My Dream City



W.HUMAIDH AHAMED
LKG 3+
IDEAL CHILDREN 'S HOUSE
MAWANELLA



A. A. Azka
11yrs old
Badhuriya centrel college,
mawanella.

## பெற்றோர்



உயிரைக் கொடுத்து உடலை வளர்த்தாள் அம்மா,வியர்வை சிந்தி நம் எதிர்காலம் செதுக்கினார் அப்பா.
பத்து மாதம் என்னை சுமந்தவள்,தன் பசியை மறந்து எனக்கு ஊட்டியவள்.
வார்த்தைகள் இல்லா என் அழுகை மொழிக்கு,அர்த்தம் தெரிந்த ஒரே தெய்வம் அம்மா!
தோள் மீது என்னை தூக்கி சுமந்தவர்,- உலகத்தை எனக்கு முதன்முதலில் காட்டியவர்.தன் கிழிந்த ஆடையை மறைத்துக்கொண்டு,எனக்கு புத்தாடை வாங்கி மகிழ்ந்தவர் அப்பா!
அம்மாவின் மடியில் தான் நிம்மதி தூக்கம்,அப்பாவின் விரல் பிடியில் தான் தைரியம்.கோவிலில் தேடும் தெய்வங்கள் அல்ல இவர்கள்,என் இல்லத்தில் வாழும் நடமாடும் தெய்வங்கள்!

ZAINAB ASAM
KU / AL IRFAN
C.C
GRADE : 11
Polgahawala

## எனது நாடு

எனது நாடு இலங்கை
எனது நாடு கடலால் சூழப்பட்டது
எமது நாட்டில் சிங்களவர்கள், முஸ்லீம்கள், தமிழர்கள், கிறிஸ்தவர்கள் வசிக்கிறார்கள்.
எமது நாட்டில் தேயிலை, கராம்பு, ஏலக்காய், மிளகு, மாணிக்க கற்கள் அதிகமாக இருக்கின்றன.
எமது நாடு அழகானது



K. R. F ஹுதா
ஸாஹிரா மஹா வித்தியாலயம்,
ஹனுப்பிட்டிய,
வத்தளை.

**படைப்பாற்றலை ஊக்குவித்து, பொது அறிவை வளர்த்து, பொழுது போக்குடன் கல்வியறிவை வளர்த்து, சிறாரிடத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் "உதய பூங்கா" எனும் சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பகுதியில் உங்கள் ஆக்கங்களை கட்டுரையாக, கவிதைகளாக, துணுக்குகளாக, விடுகதைகளாக, சிறுகதைகளாக, பிறந்தநாள் வாழ்த்தாக, சித்திரங்களாக, பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளாக இவ் வட்சப் இலக்கத்திற்கு**

**0775323239 அனுப்பலாம்.**

## வாசிப்பின் முக்கியத்துவம்



வாசிப்பு மனிதனை மனிதனாக்கும்.
வாசிப்பின் மூலம் பல விடயங்களை அறிந்து கொள்ளலாம்.
வாசிப்பதன் மூலம் நமக்கு பொருமை ஏற்படும்.
வாசிப்பதன் மூலம் எழுதும் போது ஏற்படும் எழுத்துப்பிழைகளை சரி செய்து கொள்ளலாம்.
வாசிப்பின் மூலம் பல மொழிகளை எழுத, பேச முடியும்.
வாசிப்பதன் மூலம் துணிவான முடிவுகள் எடுக்க முடியும்.
வாசிப்பின் மூலம் உயர்ந்த சிந்தனைகள் பிறக்கும்.
வாசிப்பின் மூலம் நமக்கு சுயநம்பிக்கை ஏற்படும்.
வாசிப்பு எமது வாழ்வுக்கு வெளிச்சம் தரும்.
தினமும் வாசிப்போம் வாழ்வில் வெற்றி பெறுவோம்.

**இஸ்ஹா இர்க்ஷான்**
தரம் -5
கு/அல் - அக்ஸா ம.வி
பொல்கஹவெல

## சாயா விருட்சம் விருது பெற்ற இளங்கவி உம்மு ஹானி புஷ்ரா







( ஐ. ஏ. காதிர் கான் )

இந்தியா – தமிழ்நாடு, கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியைச் சேர்ந்த "கவி கற்பகவிருட்ச விருது" பெற்ற – குட்டிப் பெண் ஆளுமை "இளங்கவி" அ.ம. உம்மு ஹானி புஷ்ரா, காஞ்சி முத்தமிழ் மையத்தின் உயரிய விருதான "சாயா விருட்சம்" (நிழல் தரும் மரம்) விருதைப் பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அளவில் இவ்விருதைப் பெற தெரிவாகியுள்ளவர்களில் இவரும் ஒருவராவார்.

"மலைகளின் இளவரசி" என வர்ணிக்கும் கொடைக்கானலில் கோடை கொண்டாட்டமாக, இம்மாபெரும் உயரிய சிறப்பு விருதுகள் வழங்கும் விழா, காஞ்சி முத்தமிழ் மையத்தின் நிறுவனர் பாவலர் சூ. லாரன்ஸ் ஏற்பாட்டில், கடந்த மே 30 ஆம் திகதி, கொடைக்கானல் பப்ளிக் ஸ்கூல் (KPS) "ஹை ஸ்கூல் ஸ்டாப்" கொடைக் கானலில் இடம்பெற்றது.

காஞ்சி முத்தமிழ் மையம், 32 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு துறைகளில் குறிப்பாக ஏழை எளிய மக்கள் மத்தியில் "கல்வி மருத்துவம் கலை" போன்றவற்றின் மூலம் மக்கள் பணி செய்து, அவர்களது வாழ்க்கையை மேம்படுத்தியும் மேலும் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அளவில் பல்துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு உயரிய விருதுகள் வழங்கிக் கௌரவப்படுத்தியும், அவர்களை ஊக்கப்படுத்தியும் தொடர்ந்து செயலாற்றி வரும் ஒரு அமைப்பாகும்.

காஞ்சி முத்தமிழ் மையத்தின் இந்நிகழ்வுகளில், இந்தியாவின் பெருமை மேதகு ஏ.பி.ஜே. அப்துல் கலாம், IAS IPS IRS போன்ற உயர் அதிகாரிகள், தமிழக அமைச்சர்கள், திரையுலக ஜாம்பவான்கள், பிரபல சமூக ஆர்வலர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள் என இன்னும் பலர் கலந்து கொண்டு விருதுகள் பெற்றும், வழங்கியும் சிறப்பித்துள்ளனர் என்பது பெருமைக்குரியது.

அந்த வரிசையில், இவ்விருது பெற தேர்வாகியுள்ள உம்முஹானி புஷ்ராவுக்கு, காஞ்சி முத்தமிழ் மையம் தனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை, மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் தெரிவித்துக்கொள்கிறது.

உம்மு ஹானி புஷ்ரா, கரூர் மாவட்டம், பள்ளப்பட்டி, "உஸ்வத்துல் ஹஸனா" பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்பில் கல்வி பயிலும் இளம் மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.




அரபாத் பஹர்தீன்

# உலகக்கிண்ண உதைப்பந்தாட்டத் திருவிழா 11ஆம் திகதி ஆரம்பம்

4 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் உலகக் கிண்ண உதைப்பந்தாட்ட திருவிழா வரும் 11ஆம் திகதி கோலாகலமாக தொடங்கவுள்ளது. உதைப்பந்தாட்ட விளையாட்டில் மாபெரும் திரு விழா என்று அழைக்கப்படும் ஃபிஃபா (FIFA) நடத்தும் உதைப்பந்தாட்ட உலகக் கிண்ணம் எதிர்வரும் 11ஆம் திகதி தொடங்கி ஜூலை 19ஆம் திகதி வரை மிகவும் பிரம்மாண்டமான முறையில் நடைபெறவுள்ளது.

வழக்கத்துக்கு மாறாக இந்த முறை 32 அணி களுக்குப் பதிலாக மொத்தம் 48 அணிகள் பங் கேற்கும் இந்த உலகக்கிண்ண உதைப்பந்தாட்ட திருவிழாவை அமெரிக்கா, கனடா, மெக்ஸிகோ ஆகிய 3 நாடுகள் இணைந்து நடத்துகின்றன.

3 நாடுகளில் மொத்தம் 16 மைதானங்களில் போட்டி நடைபெறும். போட்டிகள் இலங்கை நேரப் படி நள்ளிரவு 1 மணி, அதிகாலை 4 மணி, காலை 7மணி, 10 மணி ஆகிய நேரங்களில் நடைபெற உள்ளன.

குழு சுற்றின் முடிவில், ஒவ்வொரு குழுவிலும் முதல் 2 இடங்கள் பிடிக்கும் அணிகள் மற்றும் குழுக்களுக்கிடையில் இடம்பெறும் 8 அணிகளும் அடுத்த சுற்றுக்கு தகுதி பெறும். அதன்பின் னர் கால், அரை, இறுதிச் சுற்றுப் போட்டிகள் இடம்பெறும்.

இவ்வருடம் மொத்தமாய் 104 போட்டிகள் மொத்தம் 104 ஆட்டம், 16 நகரங்களில் மிக பிர மாண்டமாக அமைந்துள்ள மைதானங்களில் விளையாடப்படவுள்ளன. இறுதிப் போட்டி, ஈஸ்ட் ருதர்ஃபோர்டில் அமைந்துள்ள 'மெட்லைஃப் ஸ்டேடியத்தில்' நடைபெறும்.

இத்தொடர் 16 வெவ்வேறு நகரங்களில் அமைந் துள்ள 16 மைதானங்களில் நடைபெறவுள்ளது. அமெரிக்காவில் அமைந்துள்ள 11 மைதானங் களில் ஒன்றான, நியூ ஜெர்சியின் ஈஸ்ட் ருதர்ஃ போர்டில் அமைந்துள்ள மெட்லைஃப் மைதானம் 82,500 பார்வையாளர்கள் அமரும் திறன் கொண்டது.

கலிபோர்னியாவின் இங்கிள்வுட்டில் அமைந் துள்ள சோஃபி மைதானத்தில் 70,240 பேரும், டெக்சாஸின் ஆர்லிங்டனில் உள்ள ஏடி அன்ட் டி மைதானத்தில் 80,000 பேரும், டெக்சாஸின் ஹூஸ்டனில் உள்ள என்ஆர்ஜி மைதானத்தில் 72,220 பேரும், மிசவுரியின் கன்சாஸ் நகரில் உள்ள ஏரோஹெட் மைதானத்தில் 76,416 பேரும், ஜோர்ஜியாவின் அட்லாண்டாவில் உள்ள மெர்சிடிஸ் பென்ஸ் மைதானத்தில் 71,000 பேரும் ரசிக்கலாம்.

மேலும், ஃபுளோரிடாவின் மியாமி கார்டன்ஸ ில் உள்ள ஹார்ட் ராக் மைதானத்தில் 64,767 பேரும், கலிபோர்னியாவின் சாண்டா கிளாராவில் உள்ள லெவிஸ் மைதானத்தில் 68,500 பேரும் பென்சில்வேனியாவின் பிலடெல்பியாவில் உள்ள லிங்கன் ஃபைனான்சியல் ஃபீல்ட் மைதானத் தில் 69,796 பேரும் வாஷிங்டனின் சியாட்டிலில் உள்ள லூமன் ஃபீல்ட் மைதானத்தில் 68,740 பேரும், மாசாசூசெட்ஸின் ஃபாக்ஸ்பரோவில் உள்ள ஜில்லெட் மைதானத்தில் 65,878 பேரும் போட்டியை ரசிக்கலாம்.

**கனடா நாட்டில் நடைபெறும் போட்டிகள்:**

பிரிட்டிஷ் கொலம்பியாவின் வான்கூவரில் அமைந்துள்ள பிசி பிளேஸ் மைதானத்தில் 54,500 பேரும், டொராண்டோவில் உள்ள பிஎம்ஓ ஃபீல்ட் மைதானத்தில் 45,736 பேரும் அமர்ந்து போட்டியைக் கண்டுகளிக்கலாம்.

மெக்ஸிகோவில், எஸ்டாடியோ அஸ்டெகா மைதானத்திலும், (87,523 இருக்கைகள்), குவாடலஜாராவில் உள்ள எஸ்டாடியோ அக்ரான் மைதானத்திலும் (49,850 இருக்கைகள்), மான் டோரியில் உள்ள எஸ்டாடியா பிபிவிஏ மைதானத் திலும் (53,500 இருக்கைகள்) போட்டிகள் நடை பெறும்.

**குழுவில் இடம்பெற்றுள்ள அணிகள் விவரம்:**

குழு யு: மெக்சிகோ, தென் ஆப்பிரிக்கா, தென் கொரியா, செக் குடியரசு
குழு டீ: கனடா, போஸ்னியா ரூ ஹெர்சகோவினா, கட்டார், சுவிட்சர்லாந்து
குழு ஊ: பிரேசில், மொராக்கோ, ஹைதி, ஸ்கொட்லாந்து
குழு னு: அமெரிக்கா, பராகுவே, அவுஸ்திரேலியா, துருக்கி
குழு நு: ஜெர்மனி, குராசாவோ, ஐவரி கோஸ்ட், ஈக்வாடோர்
குழு கு: நெதர்லாந்து, ஜப்பான், சுவீடன், துனிசியா
குழு பு: பெல்ஜியம், எகிப்து, ஈரான், நியூஸிலாந்து
குழு ர: ஸ்பெயின், கேப் வெர்டே, சவுதி அரேபியா, உருகுவே
குழு ஐ: பிரான்ஸ், செனகல், ஈராக், நார்வே
குழு து: அர்ஜெண்டினா, அல்ஜீரியா, ஆஸ்திரியா, ஜோர்டான்
குழு மு: போர்ச்சுகல், காங்கோ, உஸ்பெகிஸ்தான், கொலம்பியா
குழு L: இங்கிலாந்து, குரோஷியா, கானா, பனாமா




# ஈட்டி எறிதல் போட்டியில் வரலாறு படைத்தார் இலங்கையின் ருமேஷ் தரங்க பத்திரகே

இத்தாலியின் ரோம் நகரில் வியாழக்கிழமை (4) நடைபெற்ற 'டயமண்ட் லீக்' (Diamond League) தடகளப் போட்டித் தொடரில், இலங்கையின் ஈட்டி எறிதல் வீரர் ருமேஷ் தரங்க பத்திரகே 92.62 மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

ஆசிய தடகள வரலாற்றில் இரண்டாவது சிறந்த ஈட்டி எறிதல் பரிதியை பதிவு செய்த வீரராகவும், உலகின் சிறந்த ஈட்டி எறிதல் பரிதியை பெற்ற வீரர்களில் 8-வது இடத்திற்கும் அவர் முன்னேறியுள்ளார்.

அவரது இந்த சாதனையானது 2026-ஆம் ஆண்டில் உலகின் சிறந்த ஈட்டி எறிதல் திறமையாகப் பதிவாகியுள்ளதுடன், 2026-ஆம் ஆண்டில் 90 மீட்டர் எல்லையைக் கடந்த முதல் மற்றும் ஒரே வீரராகவும் ருமேஷ் தரங்க வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

மேலும், இலங்கை தடகள வரலாற்றில் 90 மீட்டர் எல்லையைத் தாண்டி ஈட்டி எறிந்த முதல் வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

ரோம் டயமண்ட் லீக் 2026 ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் சேம்பியன் பட்டத்தை வென்ற இலங்கை வீரர் ருமேஷ் பத்திரகே, ஒலிம்பிக் சாம்பியனான அர்ஷத் நதீமின் ஆசிய சாதனையை முறியடிப்பதற்கு மிக அருகில் வந்துள்ளார்.

ஸ்டாடியோ ஒலிம்பிகோ மைதானத்தில் ருமேஷ் பத்திரகே பதிவு செய்த 92.62 மீட்டர் என்ற வெற்றிகரமான எறிதலானது, பாரிஸ் 2024 ஒலிம்பிக்கில் நதீம் தங்கம் வென்று படைத்த ஆசிய சாதனையை விட வெறும் 35 சென்டிமீட்டர்கள் மட்டுமே குறைவாக இருந்தது.

23 வயதான ருமேஷ் தரங்கவின் இதற்கு முந்தைய மிகச்சிறந்த தூரம் 89.37 மீட்டராக இருந்தது, அதை அவர் கடந்த மார்ச் மாதம் உள்நாட்டுப் போட்டி ஒன்றில் பதிவு செய்திருந்தார். அடுத்த மாதமே நைரோபியில் நடந்த ஒரு போட்டியிலும் அவர் 89.28 மீட்டரை எட்டியிருந்தார்.

ரோமில், ருமேஷ் பத்திரகே தனது முதல் முயற்சியில் 84.49 மீட்டரை எட்டிய பிறகு, நேற்றிரவே இரண்டாவது முயற்சியில் இந்த இமாலய சாதனையைப் பதிவு செய்தார்.

இந்தச் சாதனையின் மூலம், ஈட்டி எறிதலில் 90 மீட்டர் எல்லையைத் தாண்டிய நான்காவது ஆசிய வீரர் என்ற பெருமையை ருமேஷ் பத்திரகே பெற்றுக் கொண்டார். அத்துடன் இது 2006-ஆம் ஆண்டில் நோர்வேயின் எண்ட்ரியாஸ் தோர்கில்ட்சன் படைத்திருந்த 20 ஆண்டுகள் பழமையான 90.34 மீட்டர் போட்டி சாதனையை, 2.28 மீட்டர் என்ற மிகப்பெரிய வித்தியாசத்தில் முறியடிக்கப்பட்டுள்ளது.

இப்போது, இந்த ஆண்டில் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் உலகின் மிகச்சிறந்த முதல் இரண்டு எறிதல்களையும் ருமேஷ் பத்திரகேவே தன்வசம் வைத்துள்ளார். இது புதிய இலங்கை தேசிய சாதனையாகவும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வளர்ந்து வரும் கிரிக்கெட் அணியில் இடம் பிடித்தார் அக்மல் ஃபாஸ்லி

மேற்கிந்தியத் தீவுகள் ஆண்கள் வளர்ந்து வரும் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ள 2026 கிரிக்கெட் தொடருக்கான இலங்கை வளர்ந்து வரும் ஒருநாள் மற்றும் 4-நாள் போட்டி களுக்கான அதிகாரப்பூர்வ அணிகளை இலங்கை கிரிக்கெட் அறிவித்துள்ளது.

**இலங்கை வளர்ந்து வரும் ஒருநாள் அணி**

ஒருநாள் போட்டிகளுக்கான தொடருக்கு நிபுன் தனஞ்செய அணியின் தலைவராகவும், சினெத் ஜெயவர்தன துணை தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் 'A' அணியில் புறக்கணிக்கப் பட்ட இளம் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரரான ஷாருஜன் சண்முகநாதன் இந்த அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

- நிபுன் தனஞ்சய (அணித் தலைவர்)
- சினெத் ஜெயவர்தன (துணை தலைவர்)
- புலின பெரேரா
- விஷேன் ஹலம்பகே
- ஷாருஜன் சண்முகநாதன்- (விக்கெட் கீப்பர்)
- கவிஜ கமகே
- தினுர களுபஹன
- சமிக ஹீனடிகல
- ட்ரவீன் மேத்யூ
- மிகிரங்க சில்வா
- குகதாஸ் மதுலன்
- இனுக கரன்னகொட
- அக்மல் ஃபாஸ்லி
- ரனேஷ் சில்வா (விக்கெட் கீப்பர்)
- ரவீன் டி சில்வா

**4 நாட்கள் டெஸ்ட் போட்டிக்கான இலங்கை வளர்ந்து வரும் அணி குழாம்**

4-நாள் போட்டிகள் கொண்ட தொடருக்கான அணிக்கு தினுர களுபஹன அணியின் தலைவராகவும், ஷாருஜன் சண்முகநாதன் துணை தலைவராகவும் நியமிக்கப்பட்டு ள்ளனர்.

- தினுர களுபஹன (அணித் தலைவர்)
- ஷாருஜன் சண்முகநாதன்- (துணைத் தலைவர் , விக்கெட் கீப்பர்)
- புலின பெரேரா
- ரவிந்து ரசந்த
- அசித வன்னிநாயக்க
- சஹான் கோசல
- அஞ்சல பண்டார- (விக்கெட் கீப்பர்)
- தரிந்த நிர்மல்
- சக்தி உதாரா
- சமோத் பட்டகே
- மிகிரங்க சில்வா
- நிசல அபேரத்ன
- ரவீன் டி சில்வா
- அக்மல் ஃபாஸ்லி
- சமிக ஹீனடிகல







உள்நாட்டுப் போ- ட்டிகளில் சிறப்பாகச் செயல்பட்ட பல இளம் திறமைகளுக்கு மேற்கிந்தியத் தீவுகள் வளர்ந்துவரும் அணிக்கு எதிரான இந்தத் தொடரில் தங்களது திறமையை நிஷரூபிக்க இலங்கை கிரிக்கெட் நல்லதொரு வாய்ப்பை வழங்கியுள்ளது.

# சீனன்கோட்டை ஓவஸிஸ் கிரிக்கெட் தொடரில் கே.ஜி.எப். அணி சம்பியனாகியது






(பேருவளை பி.எம். முக்தார்)

பேருவளை சீனன்கோட்டை ஓவஸிஸ் கிரிக்கட் கழகம் (Oasis Cricket Team) ஏற்பாடு செய்த மாபெரும் கிரிக்கட் சுற்றுப் போட்டி களுத்துறை மாவட்டத்திலு ள்ள அகலவத்தை பலாந்தெ ஸ்யீன் நேச்சூர் ஹோட்டல் திடலில் (Sueen Nature Hotel) மிக விமர்சையாக நடைபெற்றது.

தொடர்ந்து மூன்று நாட்களாக நடைபெற்ற இச் சுற்றுப் போட்டியில் சீனன்கோட்டை பகுதிலைச் சேர்ந்த 20 பிரபல கிரிக்கட் அணிகள் பங்குபற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டி சீனன்கோட்டை ஆர்.டி.எக்ஸ் (RDX) அணிக்கும் கே.ஜி.எப். (KGF) அணிக்குமிடையே இடம்பெற்றதோடு கே.ஜி.எப். (KGF) அணி சம்பியனாக தெரிவாகியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஜி.எப் (K.G.F) அணி நான்கு ஓவரில் ஆறு விக்கெட் இழப்புக்கு 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதோடு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆர்.டி.எஸ். (RDX) அணி நான்கு விக்கெட் இழப்புக்கு 42 ஓட்டங்களைப் பெற்றது.

கே.ஜி.எப். (K.G.F.) அணிக்கு அன்ஸ ார் உவைஸூம் ஆர்.டி.எக்ஸ். (R.D.X.) அணிக்கு ஹூஸைன் சாதுலியும் தலைமை வகித்தனர். இரு அணி வீரர்களும் மிகத்திறமையாக விளையாடி ரசிகர்களின் பாராட்டையும் பெற்றனர்.

ஓவஸிஸ் கிரிகட் கழக (Oasis Criket Team) தலைவர் அல்-ஹாஜ் அஸ்ஜத் பவுஸ் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் இரத்தினக்கல் வர்த்தகர் அப்துர் ரஹ்மான் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.